Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, OCTOBER 9, 2021

சனிக்கிழமை ஒக்டோபர் 09, 2021 | ஒளி: 07 கதிர்: 122 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## மாணவர்களுக்கு ஃபைசர்




18 தொடக்கம் 19 வயதுக்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் தத்தமது பாடசாலைகளிலேயே ஃபைசர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியுமென கொவிட்-19 தொற்றொழிப்பு ஜனாதிபதி செயலணியின் பிரதானியான இராணுவத்தளபதி,

தொடர்ச்சி P2



## அழுத நாய்

■ ஆர். ரமேஷ்

நுவரெலியா - இராகலை பகுதியிலுள்ள தனி வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட தீயால் ஐவர் உயிரிழந்துள்ளனர். எனினும், அந்த வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் சோகத்தில் மூழ்கியுள்ளது. அந்த நாயின் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறது.

யார் விரட்டினாலும் தலையைக் குனிந்தவாறே அந்த நாய் இருக்கிறது.



18 – 19 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கு

## 21 முதல் தடுப்பூசி: 21 வரை தடை நீடிப்பு

18 - 19 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையை, 21ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, தற்போது நாட்டில் அமலிலுள்ள மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை, இம்மாதம் 21ஆம் திகதி வரையில் நீடிக்கவும், கொவிட் ஒழிப்புச் செயலணி தீர்மானித்தது.

தொடர்ச்சி P2



## விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையே பொருத்தமானது

### மூன்று அரசியல் கட்சிகள் பரிந்துரை

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறை நாட்டுக்குப் பொருத்தமானது என மூன்று அரசியல் கட்சிகள் பாராளுமன்ற விசேட குழுவில் பரிந்துரை செய்துள்ளது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறை நாட்டுக்குப் பொருத்தமானது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் நேற்று முன்தினம் (07) பரிந்துரைத்தது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் ஊடாக பொது மக்களின் நியாயமான பிரதிநித்துவத்தை உறுதிப்படுத்த முடியும் என்றும், இந்த முறையின் கீழ் சகல வாக்குகளுக்கும் மதிப்பை வழங்க முடியும் என்றும் அக்கட்சி தெரிவித்தது.

தொடர்ச்சி P2

இராகலையில் பிறந்தநாள் சோகம்:

# வீட்டுக்குள்ளே கருகியது குடும்பம்

**இரண்டு மொட்டுகள் உட்பட ஐவர் கருகினர்**

**'கேக்' கொடுத்த கணவன் வெட்ட வரவில்லை**

**போதையில் திரும்பிய மகன் வாசலில் கிடந்தார்**



■ ஆ.ரமேஸ்.

முதலாவது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் பின்னர், நித்திரைக்குச் சென்ற குடும்பமே தீயில் கருகி மாண்ட சம்பவமொன்று இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை முதலாம் இலக்கம் பிரிவில் நேற்றுமுன்தினம் (07) இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

முற்றாக எரிந்து கருக்கிய நிலையில் மீட்கப்பட்ட சடலங்களில், ஒருவயது குழந்தை, 12 வயதான சிறுவனின் சடலங்களும் உள்ளன. ஏனைய மூவரில் இருவர் பெண்களாவர். அவ்வீட்டில் வசித்துவந்த மகனும் மருமகனும் தப்பித்துக்கொண்டனர்.

குடும்பமே கருகிய சம்பவம் தொடர்பிலான செய்தி, தீயாய் பரவியமையால், அப்பகுதியே பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது. அத்தோட்டத்தை சேர்ந்தவர்கள் நேற்றையதினம் வேலைக்கும் செல்லவில்லை.

தொடர்ச்சி P2



## அபிவிருத்தித் திட்டங்கள் கூட்டமைப்பிடம் உள்ளன

வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள வளங்களை வைத்துக்கொண்டு அந்த பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வழிமுறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

"நாட்டை நடத்திச் செல்ல வருமானம் அதிகமாக இருக்க வேண்டும். செலவு குறைவாக இருக்கவேண்டும். சாதாரணமாக கூறுவது என்றால் நாட்டில் பணம் இருக்க வேண்டும் என்றார்.

தொடர்ச்சி P2



## திருக்குமார் நடேசன் 3 மணிநேரம் வாக்குமூலம்

முன்னாள் பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்‌ஷவின் கணவரான திருக்குமார் நடேசன், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினரிடம் மூன்று மணிநேரம் வாக்குமூலமளித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் சர்ச்சையை ஏற்படுத்திய, பென்டோரா ஆவணத்தில் திருக்குமரன் நடேசன் மற்றும் அவரது மனைவி நிருபமா ராஜபக்‌ஷ ஆகியோரின் பெயர்கள் வெளியிடப்பட்டிருந்தன.

அதனையடுத்தே, வாக்குமூலம் அளிப்பதற்காக வருகைதருமாறு ஆணைக்குழு, நேற்றைய தினத்தை

தொடர்ச்சி P2



## மாதிரி சிலை வழங்கிவைப்பு

வெஹெரகலவில் கண்டுபிடிக்கப்பட்ட உலகப் பிரசித்தி பெற்ற அவலோகிஸ்வரர் போதிசத்துவர் மாதிரி சிலையொன்று மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் தொல்பொருள் பேராசிரியர் காமினி ரணசிங்கவால் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவிடம் நேற்று முன்தினம் (07) கையளிக்கப்பட்டுள்ளது.

வெஹெரகலவில் கண்டுபிடிக்கப்பட்ட அவலோகிஸ்வரர் போதிசத்துவர் சிலை கிறிஸ்து வருடம் 7, 8ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியதாகும். அவலோகிஸ்வரர் போதிசத்துவரின் கருணை, தயவு ஆகிய குணங்களை சித்திரிக்கும் வகையில் இச்சிலையின் தோற்றம் அமைந்துள்ளது.

இடது காலை கீழே வைத்து இடது கையை தரையில் வைத்துக் கொண்டு வலது கையில் விதர்க்க முத்திரையை கொண்டதாக இச்சிலை விளங்குகிறது. இச்சிலையில் காணப்படும் கலை அம்சங்கள் காரணமாக அது உலகப் புகழ் பெற்று விளங்குவதாக பேராசிரியர் கபில ரணசிங்க சுட்டிக்காட்டினார்.

## டயனாவை நீக்குமாறு ஐ.ம.சக்தி அறிவித்தது



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்புரிமையில் இருந்து, தேசிய பட்டியல் உறுப்பினர் திருமதி டயனா கமகேவை நீக்குமாறு தேர்தல்கள் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## சிறிய கொத்தணி

மஸ்கெலியாவில் சிறிய கொரோனா கொத்தணி உருவாகியுள்ளது.

மஸ்கெலியா நகரில் எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட ரெபிட் ஆன்டிஜென் பரிசோதனையின் போது, 17 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மஸ்கெலியா பொது சுகாதார அதிகாரி டீ. சந்திரராஜன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பிரேமதாஸ, சந்திரிக்கா இருவருமே பொறுப்பு

### நாமல் தெரிவிப்பு: மைத்திரியையும் மாட்டிவிட்டார்



பென்டோரா ஆவணம் தொடர்பில் உலகில் இருவேறு கருத்துகள் நிலவுவதாகவும் ஒரு சாரர் இதனை சரியென்றும் இன்னொரு தரப்பு இதனை தவறு என்றும் கூறுவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் இது தொடர்பில் தானும் குறித்த இணையத்தளத்தக்குச் சென்று அந்த

தொடர்ச்சி P2

## கயமுத்துக்களுடன் மூவர் கைது



■ க. அகரன்

வவுனியாவில் ஒன்றரைக்கோடி ரூபாய் பெறுமதியான கயமுத்துக்கள் நான்கினை வைத்திருந்த மூன்று பேரை விசேட அதிரடிபடையினர் கைதுசெய்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா பிரபல உணவகத்துக்கு முன்பாக வைத்து அந் நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து நான்கு கயமுத்துக்களை விசேட

தொடர்ச்சி P2

## வடமாகாண புதிய ஆளுநர்



வட மாகாண புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்காக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக கடமையாற்றிய ஜீவன் தியாகராஜா, தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதனையடுத்து, அவர் வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

LK Newspaper Community

PAGE 1 தொடர்ச்சிகள்

## 21 முதல் தடுப்பூசி: 21 வரை...

மாணவர்கள் கல்வி கற்கும் அந்தந்தப் பாடசாலைகளிலேயே தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று (08) முற்பகல், இடம்பெற்ற கொவிட் ஒழிப்புக்கான விசேட செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அனைத்துப் பாடசாலைகளிலும் முன்னெடுக்கப்படும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டமானது, வைத்தியர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி அறிவுறுத்தினார். பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ள மேற்படி வயதுப் பிரிவினருக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும்.

இதுவரையில், 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் 100 சதவீதமளவிலும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல், 98 சதவீதமளவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என, இக்கூட்டத்தின் போது எடுத்துரைக்கப்பட்டது. 20 - 30 வயதுக்கு இடைப்பட்டோரில், இதுவரை தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாதவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

12 - 19 வயதுக்கு இடைப்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் காணப்படும் சிகிச்சை நிலையங்களின் (கிளினிக்) ஊடாக, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும், மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.



## விகிதாசார பிரதிநிதித்துவ...

பாராளுமன்ற விசேட குழு சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியது.

புதிய திருத்தத்தின் ஊடாக ஸ்திரமான அரசாங்கமொன்று உருவாக்கப்படுவதும் மற்றும் ஜனநாயகம் நிலைநாட்டப்படுவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அக்கட்சி வலியுறுத்தியது.

நாட்டில் உள்ள சகல பூகோள எல்லைகளையும் அடிப்படையாகக் கொண்ட பிரதிநிதித்துவம் புதிய திருத்தத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும். விருப்பு வாக்கு முறையின் ஊடாக தமக்குத் தேவையான மக்கள் பிரதிநிதிகளை வாக்காளர்களால் தெரிவுசெய்ய முடியும். வாக்குச் சீட்டுக்கள் மக்களால் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் சுட்டிக்காட்டியது. தேர்தல் முறையின் ஸ்திரத்தன்மை அவசியமானது என்றும், இது வாக்காளர்களின் கோணத்திலிருந்து பார்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை மாற்றியமைக்காது அதில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்குப் புதிய திருத்தங்களின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தமது நிலைப்பாடு எனப் பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் கருத்துத் தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி குறிப்பிட்டது.

விசேட பாராளுமன்றக் குழுவின் முன்னிலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தனது நிலைப்பாட்டைத் தெரிவித்தது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தேர்தல் முறை மறுசீரமைக்கப்பட வேண்டும் என அக்கட்சி தெரிவித்தது.

இராகலையில் பிறந்தநாள் சோகம்:

## வீட்டுக்குள்ளே கருகியது குடும்பம்

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராமையா தங்கையா (வயது 61) அவரின் மனைவி செவனமுத்து லெட்சுமி (வயது 57), அவ்விருவரின் மகளான தங்கையா நதியா (வயது 34) இவரின் பிள்ளைகளான,சத்தியநாதன் துவாரகன் (12), மோகன்தாஸ் ஹெரோசன் (வயது 01) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இதில், சத்தியநாதன் துவாரகன் (12), அப்பெண்ணின் முதலாவது கணவருக்கு பிறந்தவர் ஆவார்.

இரண்டாவது கணவனுக்கு பிறந்த மோகன்தாஸ் ஹெரோசன் என்ற குழந்தையின் முதலாவது பிறந்தநாள், தாங்கள் வசித்துவரும் தற்காலிக தனிவீட்டிலில் கொண்டாடப்பட்டது. எனினும், அக்குழந்தையின் தந்தை தனியாகவே வசித்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக காலையில் வந்த அக்குழந்தையின் தந்தை, கேக் ஒன்றை வாங்கிக்கொடுத்துவிட்டு வீட்டிலிருந்து சென்றுவிட்டார் அவர், கேக்வெட்டுவதற்கு வரவே இல்லை. நேற்றுப் பிற்பகலில் பொலிஸாரினால் அவர், கண்டுப்பிடிக்கப்பட்டார்.

திடீரென வீடு தீப்பற்றி எரிந்துள்ளது. எனினும், கடும் போதையில் வீட்டுக்குத் திரும்பியிருந்த தங்கையா இரவீந்திரன் (வயது 27) வீட்டு முற்றத்திலேயே படுத்து தூங்கியுள்ளார். புளோக்கல் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுபவரான இவர், உயிர் தப்பியுள்ளார்.

எனினும், உணவு உட்கொள்வதற்கு தயாரான போது, வீட்டுக்கு வெளியே வெடிப்புச் சத்தமொன்று கேட்டது. அதன்பின்னர் வீடே தீப்பற்றி எரிந்து, அணைப்பதற்காக அயலவர்களின் உதவியை அபாயக் குரல் எழுப்பி கேட்டேன் என தங்கையா இரவீந்திரன், பொலிஸாருக்கு வாக்குமூலமளித்துள்ளார்.

அக்கம்பக்கத்தினரும் அத்தோட்டத்தை சேர்ந்தவர்களும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், முயற்சி கைகூடவில்லை. மண்ணால் கட்டப்பட்டிருந்த சுவர்கள் அனைத்தும் உடைந்து விழுந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில், இராகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவ இடத்துக்கு விரைந்த நுவரெலியா மாவட்ட பொலிஸ் அதியட்சகர் உடுகமசூரிய உள்ளிட்ட தடயவியல் இரசாயண பகுப்பாய்வு பொலிஸாரும் வருகைதந்து பகுப்பாய்வுகளை முன்னெடுத்தனர்.

நேற்றுக்காலை 11.40 மணியளவில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த வலப்பனை நீதிமன்ற நீதவான் டி.ஆர்.எஸ். குனதாஸ, மரண விசாரணையை முன்னெடுத்தார். சடலங்களை மகன் தங்கையா இரவீந்திரன் அடையாளம் காண்பித்தார்.

சட்டவைத்தியர் பி.ராஜகுருவின் மரண விசாரணைக்குப் பின்னர், பிற்பகல் 2.05 மணியளவில் லொறியொன்றில் ஏற்றப்பட்டு, சடலங்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டன.

இச்சம்பவத்தையடுத்து நேற்றுமுன்தினம் பத்து மணிமுதல் அத்தோட்டத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. சமையல் எரிவாயு வெடித்துச் சிதறிய சத்தம் கேட்டதாக, பொதுமக்கள் தெரிவித்தனர். எனினும், மின்னொழுக்கு ஏற்பட்டமையால் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் வலுப்பெற்றுள்ளது.

கொரோனா சுகாதார சட்டவிதிகளை மக்கள் மீறி விடக்கூடாது என்பதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இரண்டு பிள்ளைகளின் தாயான தங்கையா நதியா இரண்டு திருமணங்களை முடித்தவர்.

முதல் கணவர் உயிரிழந்த பின்னர், மறுமணம் முடித்தவர். வலப்பனை பிரதேச ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுவதுடன் தற்போது பணியிலிருந்து விலகி கொழும்பிற்கு வேலைத்தேடி செல்ல தயாராக இருந்துள்ளார்.

இதனால், கணவன்- மனைவிக்கு இடையில் அடிக்கடி கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால் அப்பெண்ணின் கணவனை பொலிஸார் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

மின்னொழுக்கு, காஸ் கசிவு ஆகியவற்றாக இத்தீ பரவியுள்ளதா? அல்லது வீட்டுக்கு தீவைக்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பிலான விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாக தெரிவித்த இராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.



## சிறிய கொத்தணி

நகரத்துக்குள் வருகின்றவர்களிடத்தில் எழுந்தமானமாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையின் போதே இவர்கள் இனங்காணப்பட்டனர்.

இதேவேளை, நல்லத்தண்ணி, சாமிமலை ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் 14 பேருக்கு கொரோனா தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில், திம்புள்ளை-பத்தனை, பதுளை ஆகிய இடங்களிலிருந்து வருகைதந்திருக்கும் மூவரும் அடங்குகின்றனர்.

## பிரேமதாஸ,சந்திரிக்கா...

இடையில் அதாவது இந்த விவகாரத்துடன் தொடர்புடைய இலங்கையர்கள் இருவரும் 1990- 1998ஆம் ஆண்டுகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பிலேயே உள்ளது.

அதாவது முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் ரணசிங்க பிரேமதாஸவின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கொடுக்கல்-வாங்கல்கள் ஆகும்.

அப்படியாயின் இதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் யார், என கேள்வி எழுப்பிய அவர், அந்த ஆவணத்தில் 2005ஆம் ஆண்டுக்கு பிறகு முன்னெடுக்கப்பட்ட எந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலோ தகவல்கள் இல்லை என்றார்.

முன்னாள்



ஜனாதிபதிகளான ரணசிங்க பிரேமதாஸ மற்றும் சந்திரிக்காவின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கணக்குகள் தொடர்பில் இருப்பதால், அவ்விருவரே இதற்கு பொறுப்பு கூறவேண்டும் என்றார்.

நிருபமா ராஜபக்ஷ தனது சகோதரி என்றாலும், கடந்த காலங்களில் அவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனேயே அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். எனவே உறவுமுறை வேறு அரசியல் வேறு என்றார்.

## கயமுத்துகளுடன்...

அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டது. அவற்றின் பெறுமதி ஒன்றரைக்கோடி ரூபாய் என தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட மூவரும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார். அம்மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.



## மாணவர்களுக்கு ஃபைசர்

ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ள 18 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தாம் வசிக்கும் பகுதியிலுள்ள பிரதேச வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பைசர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள



முடியுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அபிவிருத்தித் திட்டங்கள் கூட்டமைப்பிடம் உள்ளன

பாராளுமன்றத்தில் நேற்று (08) இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகில் ஷ்டீவ் ஜொப்ஸ். பில்கேட்ஸ், ஜெக் மார்க் போன்ற மில்லியனர்கள், பில்லியனர்கள் தமது திறமையால், உழைப்பால் முன்னேறி வந்தவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், எமது நாட்டில் மில்லியனர்கள் அதிகளவில் உள்ளனர்.

திருட்டுகளின் ஊடாக மில்லியனர்கள் ஆனவர்கள் உள்ளனர். அவர்களின் திருட்டுகளுக்கு உதவி செய்த அரசியல்வாதிகள் உள்ளனர். திறமையால் முன்னேறியவர்களும் இருக்கின்றனர்.

எனினும், அரசியல்வாதிகள் உதவியுடன் பணம் சம்பாதித்தவர்களே அதிகளவானவர்கள் உள்ளனர். அண்மைய காலங்களை எடுத்துக்கொண்டால் ஒரு வருடத்துக்குள்ள பில்லியன் கணக்கில் இலாபம் பெற்ற தனியார் நிறுவனங்கள் உள்ளன. அவர்களுக்கு அவ்வாறு முடியும் என்றால், அரசுக்கு வருமானம் குறைவடைந்தமை குறித்து அரசாங்கம் தேடியறிய வேண்டும்.

அரசாங்கம் வழங்கிய வரி சலுகைகள் காரணமாக பொதுமக்களை விட நிறுவனங்களே அதிகளவில் நன்மை பெற்றனர். இன்று சீமெந்து, பால்மா, கேஸ் உள்ளிட்டவற்றுக்கான கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள்ளன. சீனி மோசடி, வெள்ளைப்பூடு மோசடி என்று மோசடிகளை அடுக்கிக்கொண்டே செல்லாம்.

நான் விமர்சிக்கவில்லை. வரிச்சலுகை வழங்கப்படுவதால் சாதாரண மக்கள் மீதே தாக்கம் செலுத்துகின்றது. பாரிய நிறுவனங்கள் பாதிக்கப்படுவதில்லை.

எனவேதான், பொதுமக்களுக்கு நன்மை பெற்றுக்கொடுக்கும் வகையிலான வரிச்சலுகை முறையினரை அறிமுகப்படுத்துமாறு நாங்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்றோம்.

காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் வழங்க 2019 ஏப்ரல் பட்ஜட்டில் முன்மொழியப்பட்டது எனக்குறிப்பிட்டுள்ளார்.



## திருக்குமார் நடேசன் 3 மணிநேரம் வாக்குமூலம்

குறித்திருந்தது. அதன்பிரகாரம் ஆணைக்குழுவுக்கு சமூகமளித்திருந்த அவர், சுமார் 3 மணிநேரத்துக்குப் பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

இந்நிலையில், பென்டோரா ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலங்கையர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஒக்டோபர் 6ஆம் திகதியன்று ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டயனாவை நீக்குமாறு ஐ.ம.சக்தி அறிவித்தது

2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவர், 20 ஆவது திருத்த சட்டமூலத்தின் போது, கட்சிக்கு மாற்றமான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ஆதரவாக வாக்களித்தமையால் கட்சியின் கொள்கைகளுக்குப் புறம்பாக செயற்பட்டதாக கருதி ஐக்கிய மக்கள் சக்தியினால் ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ள கட்சித் தலைமை செயற்பட்டது.

ஒழுக்காற்றுக் குழுவின் பரிந்துரைகள் கட்சியின் செயற்குழுவில் நேற்று முன்தினம் (07) சமர்ப்பி க்கப்பட்டது.

ஒழுக்காற்றுக் குழுவிற்கு



ஐந்து தடவைகளாக குறித்த பாராளுமன்ற உறுப்பினர் அழைக்கப்பட்டிருந்தாலும் ஒரு சந்தர்ப்பத்திலேனும் அவர் பங்கேற்கவில்லை.

அதற்கமைய, ஒழுக்காற்றுக்குழுவின் பரிந்துரைகளை நேற்று முன்தினம் கூடிய செயற்குழு ஏகமானதாக ஏற்றுக் கொண்டதன் பிரகாரம், கட்சியின் கொள்கைகளுக்குப் புறம்பாக செயற்பட்டமை நிரூபனமானதால் அவருடைய பாராளுமன்ற உறுப்புரிமையை நீக்கக் கோரி தேர்தல்கள் செயலகத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீபாவளி கொத்தணியை

# கொளுத்தப் போகிறோமா?





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com



கொரோனா வைரஸ் பரவலால் ஒட்டுமொத்த நாடும் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அரச, தனியார் துறைகளில் வேலை செய்யும் பலரும் தொழில்ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். நாளாந்தம் கூலி வேலைகளை செய்பவர்கள் வாழ்வாதாரத்தை முற்றுமுழுதாக இழந்தவர்களாக இருக்கிறார்கள்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கும் அரசாங்கமே முழுப் பொறுப்பு என எதிர்க்கட்சியினர் கடுமையாகக் குற்றம்சுமத்தி வருகிறார்கள். வைரஸ் பரவலுக்கு பொறுப்பற்ற பொதுமக்களின் செயற்பாடுகளும் காரணமாக இருந்ததை கடந்தகாலங்களில் அவதானிக்க முடிந்தது.

நாடு முடக்கப்பட்டு வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் அரச, தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அவ்வாறான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. முடக்கக்காலத்திலும் கொரோனா வைரஸ் பரவல் என்கிற ஆபத்துக்கு மத்தியிலும் தொழிலாளர்கள் தங்களது தொழிலுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

தேசிய சுகாதாரமுறைக்குள் பெருந்தோட்ட சுகாதாரமுறை உள்ளீர்க்கப்படவில்லை என்பதால், கொரோனாவால் மலையக மக்கள் அதிகளவான உயிரிழப்புகளை சந்திக்க நேர்ந்துள்ளது.

இடைவெளியே இல்லாத வீடுகள், பொதுவான மலசலக்கூடங்கள், பொதுவான நீர்குழாய்கள், போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாத பாதைகள், உள்ளிட்ட மலையகத்துக்கே உரிய நெடுகாலப் பிரச்சினைகள் இந்த உயிரிழப்புகளுக்கு காரணமாக அமைந்திருந்தன.

கொரோனா வைரஸ் திரிபுகள் தொடர்ந்து உருவாகிவருதை கடந்த காலங்களில் அவதானிக்க முடிந்தது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துதற்காக நாட்டின் அமல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுவதற்கு முன்னரும், பிறப்பிக்கப்பட்டதன் பின்னரும் மேல்மாகாணத்தில் சிக்கியிருந்த பலர் மலையகத்தில் உள்ள தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பியிருந்தனர்.

இவ்வாறான நிலையில், இம்முறை சுமார் ஒன்றரை மாதக் காலம் வரையில் நீடிக்கப்பட்டிருந்த ஊருடங்கு காலத்தில் மேல்மாகாணத்தில் இருந்து எவரும் வெளியில் செல்ல முடியாதவாறு பயணக்கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டிருந்தன. இதனால் நீண்ட காலம் வீடுகளுக்கு திரும்பாது பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து, மலையகத்திலிருந்து தொழிலுக்காக சென்றிருந்த பலர் கொழும்பு, கம்பஹா உள்ளிட்ட பல இடங்களில் அப்படியே தங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இம்மாதம் முதலாம் திகதி நாடு திறக்கப்பட்டிருந்தாலும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாலும், பொருளாதார பிரச்சினைகள் உள்ளிட்ட பல காரணங்களால், தொழிலுக்காக மேல்மாகாணத்துக்கு சென்றுள்ள இளைஞர், யுவதிகள் உள்ளிட்ட மலையகத்தைச் சேர்ந்த பலர் நவம்பர் நான்காம் திகதி வரவுள்ள தீபாவளி பண்டிகைகளை முன்னிட்டு தங்களது வீடுகளுக்கு செல்லலாமென திட்டமிட்டிருக்கக்கூடும்.

ஏற்கெனவே தமிழ் - சிங்கள புதுவருட கொரோனா கொத்தணி ஒன்று நாட்டில் உருவாகி ஓய்ந்திருக்கிறது. தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு நுவரெலியாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல கொண்டாட்ட நிகழ்வுகளில் மக்கள் ஒன்றுகூடிய படங்கள், வீடியோக்கள் சமூகவலைத்தளங்களில் வைரலாகி அதிக விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந்ததை மறக்க முடியாது.

இதேவேளை, இது தொடர்பில் தமிழ்மிரருக்கு கருத்துத் தெரிவித்த நுவரெலியா வைத்தியசாலையின் பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட வைத்தியரும் அம்மாவட்ட கொரோனா வைரஸ் கண்காணிப்புக் குழு உறுப்பினர், "முற்றிலும் வெளித்தொடர்பற்ற மலையகத்தின் சில பகுதிகளில் இருந்தும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் இன்னும் தளர்த்தப்படவில்லை. எவ்வாறாயினும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மேல்மாகாணத்திலிருந்து தங்களது வீடுகளுக்கு திரும்புபவர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்" என்றார்.

தமிழ் - சிங்கள புதுவருடத்தில் உருவான கொரோனா வைரஸ் கொத்தணியால் நாடு பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக தெரிவிக்கும் நுவரெலியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆயாஷ கருணாரத்ன, தீபாவளி பண்டிகை தொடர்பிலும், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நுவரெலியா மாவட்டத்துக்கு வருபவர்கள் தொடர்பிலும் மத்திய மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் கூறினார்.

நுவரெலியா மாவட்டத்தில் பி.சி.ஆர் பரிசோதனை எண்ணிக்கைகளும் கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது குறைவாகவே இருக்கிறது. மேல்மாகாணத்திலிருந்து வரும் எவரும் தனிமைப்படுத்தப்பட்டு, பி.சி. ஆர் பரிசோதனைக்கு இப்போது உட்படுத்தப்படுவதில்லை.

அண்மையில் பொகவந்தலாவை வைத்திய அதிகாரி பிரதேசத்துக்கு உட்பட்ட பிரதேசம் ஒன்றில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் அப்பிரதேசத்தில் இருந்து 14 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். இதன்படி, கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் சமூகத்தில் பரவி இருக்கிறார்கள் என்பதை ஊகிக்க முடிகிறது.

ஆபத்து இன்னும் குறையவில்லை என்பதற்கும் இதுவே சிறந்த உதாரணமாக இருக்கிறது. கொரோனா வைரஸின் ஆரம்பக் காலக்கட்டங்களில் வைரஸிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பலரும் வெள்ளைபூண்டு, பெருங்காயம், வசம்பு போன்றவற்றை தங்களது கழுத்தில் கட்டிக்கொண்டிருந்தனர்.

கொரோனா வைரஸிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிகாட்டல்களை உலக சுகாதார ஸ்தாபனம் தொடர்ந்து வழங்கி வருகிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களைபோல் அல்லாது அரசியல் தீர்மானங்களுக்கு அப்பால், கொரோனா விடயத்தில் விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளை அரசாங்கம் பின்பற்ற வேண்டும். இதனை தவறும் பட்சத்தில் அதனால் நேரடியாக நாட்டின் பொதுமக்களே பாதிக்கப்படுகிறார்கள். அப்பாவி உயிர்களே பலியாவதையும் அரசாங்கம் இனியாவது உணர வேண்டும்.

கொண்டாட்டங்களை விட கொரோனா வைரஸிலிருந்து உயிர்களைப் பாதுகாத்துக்கொண்டு வாழ்தலே முக்கியமானது. இவ்வாறான நிலையில் தீபாவளிக் கொண்டாட்டங்களால் நாட்டில் மீண்டும் ஒரு கொரோனா வைரஸ் கொத்தணி ஏற்படாதிருப்பதைத் தடுக்கும் பொறுப்பு அனைவருக்கும் இருக்கிறது.

## கொரோனா தொற்றுக்குள் வவுனியாவின் நிலை

# மரணங்கள் அதிகரிக்க என்ன காரணம்?



க. அகரன்



உலகினை ஆட்டிப்படைக்கும் கொரோனாவால் உலக வல்லரசுகளே ஆட்டம் கண்டுள்ள நிலையில், இலங்கையில் 2020ஆம் ஆண்டு நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பரவல் நிலையை அடைந்திருந்த போதிலும் அதன் உயிரிழப்பு வீதம் குறைவாகவே காணப்பட்டது.

எனினும் தொடர்ச்சியாக மக்களின் கவனயீனமான செயற்பாடுகள், சுகாதார வழிமுறைகளில் காணப்பட்ட தளர்வுகள் என்பன சடுதியாக கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்த நிலையில் மரணங்களும் அதிகரித்திருந்தது.

இந்நிலையில் வட மாகாணத்திலும் கொரோனா தொற்றுகள் அதிகரித்து மரணங்களும் மிகவும் வேகமாக கூடியிருந்தன. சடலங்களை எரிப்பதற்கு வவுனியா, யாழ்ப்பாணம் மின் மயானங்களுக்கு முன்பாக சடலங்களோடு மக்கள் வரிசையாக காத்திருந்த சம்பவங்கள் காணப்பட்டதை மறந்து விட முடியாது.

கொரோனா தொற்று வடக்கில் ஏற்பட்டதில் இருந்து 36,356 பேர் தொற்றாளர்களாக காணப்பட்ட நிலையில் 753 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான சூழலில் வடமாகாணத்தில் மரண வீதம் என்பது, இலங்கையின் சனத்தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் அதிகமாகப் பார்க்கப்படும் நிலையில், வடமாகாணத்திலும் வவுனியா மாவட்ட மரணவீதம் அதிகமாக காணப்படுகின்றது.

வவுனியாவைப் பொறுத்தவரையில், சுமார் ஒரு இலட்சத்து 98 ஆயிரம் பேர் சனத்தொகை பதிவில் காணப்படுகின்ற நிலையில், சனத்தொகை செறிவு வீதம் ஒரு சதுர கிலோமீற்றரில் 150 பேர் என்ற விதத்தில் காணப்படுகின்றது.

எனினும் வவுனியா மாவட்ட மரணவீதம், வவுனியா சனத்தொகை விகிதாசாரத்துக்கு அதிகப்படியானதாக இருப்பதுடன் இலங்கையின் மரண வீதத்தில் சனத்தொகை அடிப்படையில் முதலிடமாகவும் காணப்படுகின்றனது.

வட மாகாணத்தில் சனத்தொகை வீதம் கூடுதலாக காணப்படும் யாழ்ப்பாணத்துடன் ஒப்பிடுகையில் வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களும் மரணமும் அதிகமாக காணப்பட்ட போதிலும் யாழ். போதனா வைத்தியசாலை, வவுனியா வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் வவுனியா வைத்தியசாலை குறைந்தளவான வளத்துடன் அதிகளவான நோயாளர்களை பராமரித்துள்ளமை வெளிப்படையாகின்றது.

இதற்குமப்பால் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களுடன் ஒப்பிடுகையில் சனத்தொகை அதிகமாக இருப்பினும் யாழ் வைத்தியசாலையின் நோயாளர்களின் அளவு குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு காரணம் அங்கு மக்களுக்கு வழங்கப்பட்ட சுகாதார தெளிவூட்டல் சிறந்ததாக காணப்பட்டமையை சுட்டிக்காட்டலாம்.

எனினும் ஆளணியை பொறுத்தவரையில் யாழ் வைத்தியசாலையை பொறுத்த வரையில் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட சுமார் 2,000 சுகாதார உத்தியோகத்தர்கள் உள்ள நிலையில் உபகரண வளமும் காணப்படுகின்றது.

இதற்குமப்பால் யாழ். வைத்தியசாலைக்கு துணையாக சாவகச்சேரி வைத்தியசாலை, மந்திகை வைத்தியசாலை, ஊர்காவற்றுறை வைத்தியசாலை என்பன கொரோனா நோயாளர்களை பராமரிக்கும் செயற்பாட்டினை முன்னெடுத்திருந்தன.

இதற்கு சிறந்த நிர்வாக செயற்பாடே காரணம் என கூறலாம். அனர்த்தம் ஒன்று ஏற்படும் போது, அதன் தாக்கம் ஓர் இடத்தில் குவியாமல் பரவலாக்கப்படுவதன் காரணமாக பாதிக்கப்படுபவர்களின் பராமரிப்பு பணி என்பது இலகுவாக்கப்படும் என்பதனை புரிந்துணரப்பட்டுள்ளது. அத்துடன் வைத்தியசாலைகளின் வளங்களை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுவதனை பயன்படுத்திக்கொள்வதற்கு இலகு என்பதனாலும் குறித்த செயற்றிட்டத்தினை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்திருந்தமை சிறப்பாகும்.

எனினும் குறித்த செயன்முறையை வவுனியாவில் முன்னெடுக்க சுகாதார உயர் தரப்பு பின்னடித்தமையினால் கொரோனா தொற்றாளர்கள் ஒரே இடத்திலேயே குவிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

வவுனியாவை பொறுத்தவரையில் செட்டிகுளம் வைத்தியசாலை, நெடுங்கேணி வைத்தியசாலைகளை தற்காலிக கொரனா வைத்தியசாலைகளாக மாற்றுவதற்கான ஏற்பாட்டை முன்னெடுத்திருந்தால் வவுனியா வைத்தியசாலையில் உள்ள சுகாதார உத்தியோகத்தர்கள் மாத்திரம் பெரும் சுமையை சுமந்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்காது என்பது யதார்த்தம்.

இதற்குமப்பால் வவுனியாவில் மரண எண்ணிக்கை அதிகரிக்க காரணம் தொடர்பில் ஆராயத்தலைப்பட வேண்டிய தேவை சுகாதார தரப்பிற்கு உள்ளது. சுகாதார தரப்பினருக்கு இடையில் காணப்பட்ட உள்ளக கருத்து முரண்பாடுகள், மக்களுக்கு போதுமான தெளிவுறுத்தல்களை வழங்க சுகாதார தரப்பின் உயர் அதிகாரிகள் முன்வராமையும் காரணமாக சுட்டிக்காட்டலாம்.

வட மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் தமது மாவட்டத்தின் கொரோனா நிலைப்பாடுகளை மக்களுக்கு தெளிவுபடுத்தியும் சுகாதார வழிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வை ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்தியிருந்த நிலையில் வவுனியாவில் அவ்வாறாக இருக்கவில்லை.

இதற்குமப்பால் கொரோனா தொடர்பான நடைமுறைகளை பதவி அந்தஸ்து என்பவற்றிற்கு அப்பால் பாரபட்சமின்றி செயற்படுத்தியிருந்தால் கொரேனா மரணங்களை வவுனியா மாவட்டத்தில் கட்டுப்படுத்தியிருக்கலாம்.

எனினும் வவுனியாவில் கொரோனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட வேண்டும் என கடும் பிரயத்தனத்தில் செயற்பட்ட கணிசமான சுகாதார தரப்பினரையும் வவுனியா சமூகம் மறந்து விட முடியாது.

எதுவாகினும் கொரோனா தொற்றில் இருந்து வவுனியா மாவட்டத்தினை பாதுகாத்து மரணங்களில் மனித உயிர்களை இவ் உலகில் வாழ வைக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவும் அதற்கு சுகாதார தரப்பினர் ஆதரவு வழங்கவும் முன்வரவேண்டும் என்பதே காலத்தின் தேவை.



மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில்...

# கரங்கா வட்டையின் கதை

## தேர்தல் கால உண்டியலை உடைக்கப்போவது யார்?

நூருல் ஹுதா உமர்







இலங்கையின் பலத்தில் ஒன்றாக இருப்பது, பரந்து விரிந்து இருக்கும் வயல் நிலங்களாகும். சரியான பொறிமுறைகளுடன் விவசாயம் செய்தால், அரிசி உற்பத்தியில் இலங்கை தன்னிறைவடைந்த தேசமாக மாறும் என்பதெல்லாம், இப்போது யாரும் அரசியல் காரணிகளுக்காக ஏற்றுக்கொள்வதில்லை என்பதெல்லாம் வேறுகதை.

அப்படி, விவசாய நிலங்களில் நடக்கும் அத்துமீறல்களும் அடாவடிகளும் முறுகல்களும் நாடு பூராகவும் பரந்து விரிந்து இருக்கின்றன. அதில் ஒன்று தான் கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில், அம்பாறை பிரதேச செயலகம்- சம்மாந்துறை பிரதேச செயலக எல்லையில் அமைந்துள்ள கரங்கா வட்டை ஆகும்.

கரங்கா வட்டை பிரச்சினையானது, முற்றிலும் வித்தியாசமானது. இங்கு மோதியவர்கள் முஸ்லிங்களும் சிங்களவர்களும் ஆவர். இங்கு, சிங்கள மக்களால் அதிகமாகப் பேசப்பட்ட விடயம் 'தேச பக்தி'. 'தேச பக்தி என்பது, அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்' என்றார் சாமுவேல் ஜோன்ஸன். தேச பக்திக்குச் சற்றும் குறைவில்லாத ஒன்றுதான் இனவாதம். அப்படியான இனவாத குரலில் முளைத்த பிரச்சினைதான் கரங்கா வட்டை பிரச்சினை.

அம்பாறை - சம்மாந்துறை பிரதேச எல்லையில் அமைந்துள்ள வளத்தாப்பிட்டியில் உள்ள முஸ்லிங்களின் பூர்வீகக் காணியான கரங்க வட்டை, தற்போது சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. வெள்ளையர்களின் காலம் முதல், இந்தக் காணிகளில் முஸ்லிம்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். இப்போது இந்த வயலில், முஸ்லிங்கள் கால்வைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

2013 ஆம் ஆண்டு அம்பாறையில் நடைபெற்ற 'தேசத்துக்கு மகுடம்' கண்காட்சியின் பின்னர் இந்தக் காணிகள் முஸ்லிம்களிடமிருந்து கைநழுவச் செய்யப்பட்டன. தற்போது, இந்தக் காணிக்குள் சிங்கள மக்கள் அத்துமீறி, வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். முஸ்லிம்களின் காணி என்பதற்கான முழு ஆதாரமும் உறுதிப்பத்திரங்களும் வரைபடங்களும் உரிமையாளர்களிடம் உள்ளன. காணி விடயம் தொடர்பில் அம்பாறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும், அவர்கள் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இந்தப் பாரதூரமான விடயம் தொடர்பில், அம்பாறை மாவட்ட அரசியல்வாதிகள் எவரும் உரிய முறையில் கவனத்தைச் செலுத்தாமையே காணிகள் பறிபோவதற்கான பிரதான காரணம் என பாதிக்கப்பட்ட மக்கள் கருதுகின்றார்கள்.

கடந்த ஆட்சிகளில் அமைச்சுப் பதவிகளை வகித்துக் கொண்டிருந்தவர்கள், அவர்களின் அமைச்சின் ஊடாகவும் அவர்கள் ஆதரவு வழங்கிய அரசாங்கத்தின் ஊடாகவும் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய எவ்வளவோ பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டிருக்க முடியும். ஆனால், அவர்கள் அவற்றைச் செய்யவில்லை; அதற்கான காரணங்கள் பல உள்ளன.

இந்தக் கரங்காவட்டை பிரச்சினை, அண்மைய நாள்களில் கடுமையாக சூடுபிடித்துள்ளது. இதனை தீர்க்க வேண்டும் என்ற கனவுடன் விவசாயிகளும் விவாசாய அமைப்புகளும் போராடி வருகின்றன.

கரங்கா விவசாயிகள், தமது காணிகளில் விவசாய நடவடிக்கை செய்ய முடியாதவாறு, பெரும்பான்மை இனத்தை சேர்ந்த சிலரால் தாக்கப்பட்டு, வயலிலிருந்து துரத்தியிருந்த போது, விவசாய அமைப்புகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்தனர்.

இதையடுத்து, உடனடியாக அம்பாறை மாவட்ட செயலாளரைத் தொடர்புகொண்ட ஹரீஸ் எம்.பி, சம்மாந்துறை பிரதேச விவசாயிகளின் பக்கமுள்ள நியாயங்களை விளக்கிய போது அதனை ஏற்றுக்கொண்ட மாவட்ட செயலாளர், இதுதொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்வை பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் உறுதியளித்தார்.

இதன் பின்னர், இந்தப் பிரச்சினையை ஆரம்பம் முதல் கையாண்டு வரும் சிரேஷ்ட சட்டத்தரணி நஸீல், அம்பாறையிலிருந்து அத்துமீறல்களை செய்துவரும் அந்தக் குழுவுக்கு பின்னால், சக்திவாய்ந்த அரசியல்வாதிகள் இருப்பதாகவும் இதனால் பொலிஸ் நடவடிக்கைகளில் தொய்வு நிலை ஏற்பட வாய்ப்புள்ளது எனவும், எனவே அம்பாறையிலுள்ள அரசியல்வாதிகளை சந்தித்து, விவசாயிகளின் நிலையைத் தெளிவுபடுத்தி, ஆக்கிரமிப்பாளர்களை கட்டுப்படுத்த பணிக்குமாறு ஹரீஸ் எம்.பிக்கு ஆலோசனை வழங்கினார்.

இதையடுத்து, செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி, அம்பாறையில் பலம்பொருந்திய ஒருவராக உள்ள இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவை, ஹரீஸ் எம்.பி சந்தித்து, விவசாயிகளின் பக்க நியாயத்தை எடுத்துக்கூறி தீர்வை பெற்றுத்தர உதவுமாறு கோரினார்.

உடனடியாக, அம்பாறை மாவட்ட செயலாளரைத் தொடர்புகொண்ட இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, இவ்விடயம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும், பொலிஸாரை கொண்டு அத்துமீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டதுடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை தொடர்புகொண்டு அத்துமீறுபவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அதேபோன்று சம்மாந்துறை விவசாய சங்க பிரதிநிதிகள், வட்டானைமார்கள், சட்டத்தரணி நஸீல், சட்டத்தரணி யூ.கே. சலீம் போன்றோர்கள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரைச் சந்தித்து, விவசாயிகளின் நியாயத்தை எடுத்துரைத்து அநியாயங்களுக்கு எதிரான முறைப்பாடுகளை பதிவுசெய்ய நடவடிக்கை எடுத்தனர்.

ஆக்கிரமிப்பு செய்த குழுவினர், மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவை கொண்டு, பொலிஸ் நடவடிக்கைகளை தடுத்துநிறுத்த முற்படுவதாக நம்பகமான தகவல் கிடைத்துள்ளதாக அறியவந்ததை அடுத்து, 20ஆம் திருத்தத்தை ஆதரித்த 07 முஸ்லிம் எம்.பிக்களும் ஹரீஸ், பைசால் காசிம், முஸாரப் எம்.பிக்கள் தலவத்கொடையில் உள்ள அமைச்சரின் வீட்டில் அமைச்சரை சந்தித்து, கரங்கா வட்டை விடயம் அடங்கலாக முக்கிய பல விடயங்களை கலந்துரையாடினர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை தொடர்புகொண்ட அமைச்சர் சரத் வீரசேகர, அத்துமீறிய குழுவினருக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுத்து சட்டவிரோத குழுவை அகற்றி, நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

அதன் பின்னர் எம்.பிக்களான ஹரீஸ், பைசால் காசிம் ஆகியோர் இதுவிடயமாக கலந்துரையாடி, சம்மாந்துறை தவிசாளர் ஏ.எம். நெளஸாதின் ஆலோசனைகள் தொடர்பிலும் கலந்துரையாடி, மாவட்டச் செயலாளருடனான கலந்துரையாடல் இடம்பெற வேண்டும் என்று தீர்மானித்தனர்.

இந்தப் பிரச்சினையை இன்னும் காலம் தாமதிக்காமல், விவசாயிகளின் விதைப்பு காலம் ஆரம்பிக்கவுள்ளதால் இதுதொடர்பில் ஆராய்ந்து தீர்வைப்பெறும் உயர்மட்ட கலந்துரையாடலை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டதன் பேரில், சம்மாந்துறை தவிசாளர் ஏ.எம்.நெளசாத், ஹரீஸ் எம்.பி, பைசால் எம்.பி, முஷாரப் எம்.பி, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, சட்டத்தரணிகளான நஸீல், யூ.கே. சலீம், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில், எல்லோரும் சிறப்பாகத் தமது பணியை செய்தனர். சம்மாந்துறை தவிசாளர் நெளசாத், கரங்கா வட்டை வரலாற்றை தெளிவாக விளக்கினார். இதில் உள்ள நியாயங்கள், முஸ்லிம் - சிங்கள மக்களின் ஒற்றுமை; சகவாழ்வின் அவசியம் தொடர்பில் இங்கு பேசினர்.

இதன்போது கருத்து தெரிவித்த மாவட்ட செயலாளர், அத்துமீறியவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாவும் இனிமேல் நிம்மதியாக விவசாயம் செய்ய விவசாயிகள் காணிக்கு செல்ல முடியும் என்று உறுதியளித்தார். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் விவசாயத்தை செய்ய கரங்காவட்டைக்கு செல்லுமாறு விவசாயிகளை கேட்டுக்கொண்டதுடன் பாதுகாப்பு வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

ஆனாலும், பிரச்சினை முடிவுக்கு வரவில்லை. அடுத்த நாள், பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் களவிஜயம் செய்து நிலைமையை கண்காணித்து கொண்டிருந்த போது, மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக, பௌத்த தேரர் தலைமையிலான சிங்களவர்கள், கரங்கா வட்டை காணிக்குள் வந்து பிரச்சினையை ஆரம்பித்தனர். பொலிஸில் முறைப்பாடானது. மீண்டும் பிரச்சினை தொடக்கப்புள்ளியை வந்தடைந்துள்ளது.

கரங்கா வட்டையில் இனமோதல்கள் உருவானது எனும் வரலாற்றுத் துயரை, எதிர்காலம் பேசாமல் காக்க, ஒற்றுமை எனும் கயிறு பலமாக இங்கு பிடிக்கப்பட வேண்டும்.

சந்தனவெட்டை கிராமத்தில்

# கண்டெடுத்த 'குண்டுமணி'

## கல்விக்குக் கரம்கொடுங்கள்



அ. அச்சுதன்







காசிராசா விணோஜா, கடந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி, மூன்று ஏ சித்திகளையும் ஒரு பீ சித்தியையும் இரண்டு சீ சித்திகளையும் ஒரு எஸ் சித்தியையும் பெற்றுக்கொண்ட ஒரு கிராமத்து மாணவி. அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கான பாராட்டுதல்கள், பரிசளிப்புகள், வாழ்த்துதல்களைக் கேட்டுக் கேட்டு சலிப்படைந்திருக்கும் பலருக்கு, இச் செய்தி ஒரு விடயமாகவே இருக்காது. அப்படித்தானே?

தமது பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு மகிழ்வடைகின்ற மாணவர்கள் மத்தியில், தனது அடுத்தகட்ட கல்விக்கான வழி என்ன என்ற ஏக்கத்துடன் இருப்பவள்தான் விணோஜா என்கிற விணோ.

தமது பிள்ளைகளின் பெறுபேறுகளைக் கூறியும் பிறரிடம் பெருமைப்பட்டு விளம்பரப்படுத்திக்கொள்ளும் பெற்றோர்கள் மத்தியில், தனது பிள்ளையின் உயர்தரக் கல்விக்கான வழி என்ன என்ற ஏக்கத்துடன் இருப்பவர்தான் விணோவின் தாயார் தவமணி. விணோவின் தந்தை 14 ஆண்டுகளாக குடும்பத்தை தனியே தவிக்க விட்டு பிரிந்துசென்றுவிட்டார்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அடிப்படை வசதிகள் மிகக் குறைந்த கிராமம் சந்தனவெட்டைக் கிராமம். கட்டைபறிச்சான் தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ளது. இங்குள்ள மக்கள் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒட்டுவட்டவன் மலை, கயல்வேந்தன் மலை, சுவாமிமலை, கயல்கொடி மலை ஆகிய மலைத் தொடர்களின் இருபக்க அடிவாரங்களிலும் சுமார் 90 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர்.

மூதூர் நகரத்திலிருந்து சுமார் ஆறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. அருகிலுள்ள கயல்வேந்தன் குளத்தில் மீன்பிடித்தல், விறகு எடுத்தல், தர்மம் எடுத்தல், கூலிவேலை செய்தல் போன்றவற்றை தமது வருமானமீட்டும் வழிகளாகக் கொண்டுள்ளனர். நாளாந்தம் கிடைக்கின்ற சிறிதளவு உணவுத் தேவையைத் தவிர வேறு சேமிப்புகளோ முதலீடுகளோ இல்லை.

2016 ஆம் ஆண்டுவரை சாதாரண தரம்வரை கற்றவர்கள் இங்கு எவரும் இருக்கவில்லை. எழுத்தறிவு அற்றவர்கள் அதிகம் உள்ளனர். வறுமை காரணமாக பாடசாலைக்குச் சென்று, இடை விலகியவர்கள் மிக அதிகம். வறுமை, பசி, பட்டினி என்ற வார்த்தைகளுக்கான அர்த்தம் சந்தனவெட்டைக் கிராமத்தில்தான் உள்ளது. இங்குள்ள பிள்ளைகள் இன்னமும் கல்லிலும், முள்ளிலுமே நடக்கின்றனர். மூதூரில் இதுவரை கொங்கிறீற் வீதியைக்காணமுடியாத கிராமம் சந்தனவெட்டை கிராமமே.

தரம் 5 வரை வகுப்புக்களைக்கொண்ட பாடசாலை ஒன்று உள்ளது. சிறார்களுக்கு கல்வி வழங்குகின்ற முன்பள்ளி ஒன்று, மத வழிபாட்டுக்குரிய சிறிய சிவலிங்கேஸ்வரர் ஆலயமும், சிறிய ஜெப ஆலயமும் உள்ளது. பலநோக்கு கட்டடம் ஒன்று உள்ளது. இதுதான் விணோவின் ஊர்.

இப்போது கூறுங்கள்! விணோ சாதனைப் பெண்தானே. அவளது பெறுபேறு சரித்திரச் சாதனைப் பெறுபேறுதானே. சந்தனவெட்டை வரலாற்றில் விணோ ஒரு கலங்கரை விளக்குத்தானே.

விணோவுக்கு ஆரம்பக் கல்வியை வழங்கிய பாடசாலை சந்தனவெட்டை ஸ்ரீ ஐங்கரன் வித்தியாலயம். இப்போது ஒரேயொரு கட்டடத்துடன் இயங்கிவருகிறது. விணோ ஆரம்பக் கல்வி கற்கும்போது கட்டடம் இருக்கவில்லை. கடந்த 2006 இல் இடம்பெயர்ந்தபோது விணோவுக்கு வயது இரண்டு. ஓராண்டு கழித்து மீண்டும் வந்தபோது ஊர் இருக்கவில்லை. இருந்த ஓரிரு ஓலைக் குடிசைகளும் அழிக்கப்பட்டு காடாக காட்சியளித்தன. சந்தனவெட்டை கிராம மக்களை அரசாங்கம் அம்மன்நகரின் கயல்வேந்தன் குளக்கரைப் பகுதியில் இருந்த காட்டுப்பதியை துப்பரவுசெய்து அங்கு தகரத்தில் குடிசைகளை அமைத்து குடியமர்த்தியது.

அப்போது தொண்டு நிறுவனங்களால் அமைத்துக்கொடுக்கப்பட்ட தகரக் கொட்டகைதான் பாடசாலையாக இருந்தது. அந்தத் தகரக் கொட்டகைப் பாடசாலையில்தான் விணோ தனது கல்வியை ஆரம்பித்தாள். புல் வெளியில் விரிப்பொன்றில் மாணவர்கள் அமர்ந்திருக்க ஆசிரியர் சிறிய கல்லில் இருந்து கற்பிக்கும் பாடசாலையில் விணோ கற்றவள்.

சிறு வயதுமுதலே கல்வியில் ஆர்வமிருந்தாலும் வறுமை அதற்குத் தடையாக இருந்தது. விணோவின் குடும்பத்துக்கு மட்டுமல்ல சந்தனவெட்டைக் கிராம மக்கள் அனைவருக்குமே பசி பட்டினி உணவு என்ற தேவையே பிரதானமாக இருந்தது. இதனால் தகரக் கொட்டகையில் பாடசாலை நடந்தாலும் பிள்ளைகள் அங்கு சென்று கல்வி கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் அரசின் திட்டப்படி பாடசாலை நிருவாகமும் தொண்டு நிறுவனங்களும் பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் திட்டத்தை கொண்டுவந்தனர். இதனால் மாணவர்களின் வருகை சற்று அதிகரித்தது. இருப்பினும் அதிபரும் ஆசிரியர்களும் வீடு வீடாகச் சென்று பிள்ளைகளை அழைத்து வந்து கல்வி புகட்டும் வழக்கம் இருந்தது.

இவ்வாறான சூழலில் கற்ற விணோ 2014 புலமைப் பரிசில் பரீட்சையில் 119 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தாள். சகல வசதிகளையுமுடைய பிள்ளைகள்கூட சித்தியடையத் தவறுகின்ற நிலையில் விணோ முதன்முதலில் தனது கிராமத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்தாள்.

சந்தனவெட்டையில் தரம் 5 வரையே வகுப்புகள் இருந்தது. இனி தொடர்ந்து கற்பதானால் 8 கிலோமீட்டர்கள் தாண்டி கட்டைபறிச்சானுக்கு வரவேண்டும். வருவதானால் காட்டுப்பாதையூடாக சைக்கிளும் இல்லாமல் யார் விணோவை அழைத்துச் செல்வார்கள்? அதனால் தாயார் தவமணி, இறையாற்றுவெளி ஆற்றைக்கடந்து, கிணாந்திமுனை வயல்வெளி ஊடாக 4 கிலோமீட்டர் தூரத்திலுள்ள இருதயபுரம் வித்தியாலயத்துக்கு விணோவைக்கொண்டு சேர்த்தார். 2015 தொடக்கம் 2018 வரை இருதயபுரம் வித்தியாலயத்தில் கல்வி கற்ற விணோ கல்வியில் மிகுந்த கெட்டித்தனமாக இருந்தாலும் பாடசாலைக்குச் செல்லும் நாட்கள் குறைவாகவே காணப்பட்டது. வறுமை, போக்குவரத்து சிரமம் என்பன காரணமாக இருந்தன.

அடிக்கடி பாடசாலைக்கு வராமல் நிற்பதும், சுகவீனமென்று சாக்குப்போக்குச் சொல்வதுமாக இருந்த விணோவை அவதானித்த பாடசாலை முதல்வர் அருட்சகோதரி கவிதா அவர்கள், அங்கு கல்வி கற்பித்த ஆசிரியை செல்வி. ஜசோயா குரூஸ் அவர்களின் உதவியைப் பெற்று மூதூரிலுள்ள டிமென்லோ மகளிர் இல்லத்தில் விணோவைச் சேர்ப்பித்து மூதூர் புனித அந்தோனியார் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்க அனுமதியும் பெற்றுக்கொடுத்தார்.

2019 ஆம் ஆண்டுதரம் 10 இல் அந்தோனியார் மகாவித்தியாலயத்தில் இணைந்த விணோவுக்கு மாணவர் இல்லத்தில் கிடைத்த ஆதரவும், பாடசாலையில் கிடைத்த அக்கறையும் அவளை கல்வியில் ஆர்வம் காட்டவைத்தது.

2020 இல் நாட்டில் ஏற்பட்ட கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை விணோவின் கல்வியிலும் பாதிப்பை ஏற்படுத்தாமலில்லை. பயணக்கட்டுப்பாடு காரணமாக விணோ வீட்டிலிருந்து கற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இணையவழிக் கல்வியை விணோவால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. கையடக்கத் தொலைபேசியே இல்லை. பின்னர் கணனிக் கல்வியை எப்படி எதிர்பார்ப்பது. சேர்ந்து கேட்டுப் படிப்பதற்கும் கிராமத்தில் கற்றவர்கள் எவருமில்லை. விணோவுக்கு இருந்த ஒரேயொரு வாய்ப்பு கையிலிருந்த பாடப்புத்தகங்கள் மற்றும் கடந்த கால வினாப்பத்திரங்கள் மாத்திரமே. படித்தாள். விடாமுயற்சியுடன் படித்தாள். பரீட்சை எழுதினாள், வளர்ச்சியடைந்த கல்விச் சூழல் உள்ள கிராமத்து மாணவர்களும் பெற்றோரும் மூக்கின்மேல் விரல் வைத்து நோக்குமளவுக்கு விணோ சந்தனவெட்டை கிராமத்தில் மூன்று ஏ தரச் சித்திகள் அடங்கலாகச் சித்தி பெற்று சாதனை படைத்தாள்.

அடுத்த நிலை என்ன? விணோ இனி என்ன செய்யப்போகிறாள்? இந்த வினாக்களுக்கு விடையாக மேலும் பல வினாக்கள் எழலாம்.

உயர்தரத்தில் கலைப்பிரிவில் தான் கல்வி கற்று ஓர் ஆசிரியராக வந்து சந்தனவெட்டை கிராமத்திலுள்ள பிள்ளைகளுக்கு கல்வியை போதிக்கவேண்டும். என்பதே விணோவின் அசைக்கமுடியாத இலக்கும் நம்பிக்கையும். அதை மெய்ப்பிக்கும் விதத்தில் தான் பரீட்சை எழுதிவிட்டு வீட்டிலிருந்த காலத்தில் தன்னைச் சூழ இருந்த தனது கிராமச் சிறார்களுக்கு தன்னாலியன்ற கல்வியை கற்பித்து வந்திருக்கிறாள் விணோ.

கற்ற கல்வியை தனது கிராமத்துப் பிள்ளைகளுக்கு கொடுக்கவேண்டுமென்ற உயரிய குணம் இப்போதே விணோவுக்குள் சுடராக ஒளிர்ந்துகொண்டிருக்கிறது.

விணோ தனது உயர்தரக் கல்வியைத் தொடர மீண்டும் அன்னை தெரேசா மாணவர் இல்லத்துக்குச் செல்லப்போகிறாள். அதே உதவும் உள்ளங்கள் விணோவை இருகரம் நீட்டி அழைக்கிறார்கள். மீண்டும் மாணவர் இல்லத்தின் ஆதரவு, மீண்டும் அதே பாடசாலையின் உயர் சேவையும் அக்கறையும்...

அன்பான உறவுகளே...! நாம் என்ன செய்யப்போகிறோம். சந்தனவெட்டை கிராமத்தின் சாதனை மகள் விணோவின் இலட்சியத்தை நிறைவுசெய்ய நம்மால் ஆனது என்ன?

பசித்தவர்களுக்கு உணவளிப்பதுதான் உண்மையான தருமமும் பெறுமானமும். தேவை உள்ள இடத்தில்தான் சேவை செய்யவேண்டும். சந்தனவெட்டையின் எதிர்காலக் கல்வி வளர்ச்சிக்காக முளைத்திருக்கும் விணோ என்கின்ற வீரியமான பயிருக்கு உரமூட்டுவதுதான் கல்விப்புலத்துக்கு இருக்கக்கூடிய தலையாய பொறுப்பு.

கல்வியில் வீழ்ச்சியுறும் வடக்கு, கிழக்கு

# பரிகாரம் என்ன?

வ. திவாகரன்

ஒரு சமூகத்தின் இருப்பு, அபிவிருத்தி ஆகிய இரண்டுக்கும் மிகவும் முக்கியமானது கல்வி ஆகும். இழந்தவற்றை வென்றெடுப்பதற்கும், போட்டி இட்டு முன்னேறுவதற்குமான ஊடகம் கல்வியே!



இலங்கையில் அமல்படுத்தப்பட்டு வரும் இலவசக்கல்வியால் அனைத்துத் தரப்பினரும் கற்க கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இவ்வாறான இலவசக் கல்விமுறைமையின் கீழ், மாணவர்களுக்கு தேசிய ரீதியில் பொதுப்பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை, உயர் தரப் பரீட்சை போன்றவை முக்கியமான பரீட்சைகளாகும். இவற்றுள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கொடுப்பனவு மற்றும் தேசிய பாடசாலைகளில் கற்பதற்கான அனுமதிக்காக உதவுகின்றது. சாதாரண தரப் பரீட்சை உயர்தரம் கற்பதற்கான பரீட்சையாகவும் உயர்தரப் பரீட்சை பல்கலைக்கழக தெரிவுக்கான பரீட்சையாகவும் அமைந்திருக்கின்றன.

இப்பரீட்சைகளில், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் அண்மையில் வெளியாகி இருந்தன. இப்பரீட்சை பெறுபேற்று பகுப்பாய்வினையும் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டிருந்தது. அத்தரவுகளின் அடிப்படையில், சாதாரண தரம் சித்தியடைந்து, உயர்தரம் கற்பதற்கு சித்தியடைந்தவர்கள் என்ற தரப்படுத்தலில், ஒன்பது மாகாணங்கள் உள்ள இலங்கைத்தீவில், தமிழ் பேசுகின்றவர்கள் செறிந்து வாழ்கின்ற கிழக்கு, வடக்கு மாகாணங்கள் முறையே எட்டாம், ஒன்பதாம் இடங்களைப் பெற்றுள்ளன. இந்நிலை மிகவும் கவலைக்குரியதே.

2014ஆம் ஆண்டில் இருந்து, 2020ஆம் ஆண்டு வரையான பெறுபேற்று பகுப்பாய்வை அவதானிக்கின்ற போது, தொடர்ச்சியாக வடக்கு மாகாணம் ஒன்பதாவது மாகாணமாக உள்ளதுடன், 2018ஆம் ஆண்டு மாத்திரம் 69.99 சதவீதத்தினைப்பெற்று எட்டாவது இடத்திலும், கிழக்கு மாகாணம் 69.97வீதத்தைப் பெற்று ஒன்பதாவது இடத்தையும் வகித்துள்ளது.

அவ்வாறெனின் 2014ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை வடக்கு மாகாணம் இறுதி மாகாணமாகவே உள்ளமை மிகவும் வேதனையான விடயமாகும். அதேபோன்று 2014ஆம் ஆண்டு தொடக்கம், 2020ஆம் ஆண்டு வரையான பகுப்பாய்வின் அடிப்படையில், கிழக்குமாகாணம் 2014இல் ஐந்தாம் இடத்தையும், 2019 இல் ஏழாவது இடத்தையும் 2018இல் ஒன்பதாவது இடத்திலும் ஏனைய ஆண்டுகளில் எட்டாவது இடத்தையும் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. கடந்த ஏழு வருட பகுப்பாய்வின் மூலமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இறுதிநிலையில் இருக்கின்றமையை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

2010ஆம் ஆண்டு கிழக்கு மாகாணம் நான்காம் இடத்தையும் 2011ஆம் ஆண்டு ஆறாம் இடத்தையும் பின்வந்த 2012, 2013, 2014ஆம் ஆண்டுகளில் ஐந்தாம் இடத்தையும் வகித்த கிழக்கு மாகாணம், 2015இல் இருந்து எட்டாம் இடத்துக்குச் சென்றமையை பெரியளவிலான வீழ்ச்சியாகவே பார்க்க முடிகின்றது.

கடந்த மூன்று தசாப்த யுத்த சூழலால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்கள், பின்நிலையை தழுவுகின்றமைக்கு பல்வேறு காரணங்களும் உள்ளன.

பொருளாதார ரீதியாக அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகளவில் இம்மாகாணங்களில்



வாழ்கின்றனர். இதனால் பிள்ளைகள் தொடர்ச்சியான கற்றலில் ஈடுபடுவதும் சவாலாகவே உள்ளது. மாணவர்களின் வரவு வீதக்குறைபாடும் பரீட்சைப் பெறுபேற்றில் வீழ்ச்சியை கொண்டுவருகின்றது.

சமூகத்தில் இடம்பெறுகின்ற சீர்கேடுகளும் சட்டவிரோத செயற்பாடுகளும் ஒழுக்கமின்றிய செயற்பாடுகளும் பெறுபேற்றில் குறைவை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, மாணவர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாதல், சட்டவிரோத கசிப்பு உற்பத்தி இவற்றிற்கு தந்தையர்கள், சகோதரர்கள் அடிமையாதல்; இதனால் வீடுகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகளும் மாணவர்களின் கல்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றன.

இதேவேளை, அரசினால் வழங்கப்படுகின்ற புத்தகங்களை கற்காது, வெறுமனே ஆசிரியர்கள் வழங்குகின்ற வினா விடைகளைக் கற்றல், சுயமாக கற்கின்ற வீதம் குறைவடைந்து செல்லல், கற்பதற்கான சூழல் வீட்டில் இன்மை, பாடசாலைக் கற்றல், கற்பித்தலில் மாத்திரம் தங்கியிருத்தல் போன்ற பிரச்சினைகளும் மாணவர்களின் பெறுபேறு வீழ்ச்சியடைவதற்கு காரணமாகின்றதெனலாம்.

அநேக பகுதிகள் கஸ்ட, அதிகஸ்ட பகுதிகளாகவே உள்ளன. இதனால் வளப்பற்றாக்குறைகளும் உள்ளன. சமூகத்தில், மாணவர்களிடத்தில் உள்ள பிரச்சினைகளால் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இலவசக் கல்வியை முறையாக எல்லா இடங்களுக்கும் வழங்காமையும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் வீழ்ச்சியடையக் காரணமாக உள்ளன.

குறித்த இரு மாகாணங்களிலும், முக்கிய பாடங்களுக்கான வெற்றிடங்கள் இன்றும் நிலவிக்கொண்டே இருக்கின்றன. இதனால் ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் கற்கமுடியாமல், அவ்வாறான பாடங்களில் சித்திபெறத் தவறுகின்றனர்.

குறிப்பாக, கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் முக்கிய பாடங்களாக இருக்கின்ற போதிலும், அப்பாடங்களுக்கு இன்றுவரை வெற்றிடங்கள் நிலவிக்கொண்டே இருக்கின்றன. கணிதபாடம் மிக முக்கியமாக பார்க்கப்படுகின்றது. உயர்தரம் கற்பதற்கு மிகவும் அவசியமாக உள்ளது.

அவ்வாறான நிலையில், கணித பாடத்திற்கு ஆசிரியர்கள், சில பாடசாலைகளில் இல்லாமையால், பாடசாலையை மாத்திரம் நம்பியுள்ள பிள்ளைகள் மிகவும் பாதிப்படைகின்றனர். இப்பாதிப்பு மாகாண பெறுபேற்று பகுப்பாய்வில் வீழ்ச்சியை உண்டுபண்ணுகின்றது.

மேலும், பொருத்தமான இடமாற்றங்கள் நடைபெறாமையும் மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு காரணமாக அமைகின்றது. குறிப்பாக, சமப்படுத்தல்கள் இன்றி மாகாண இடமாற்றங்கள் நடைபெறுகின்றமையால், ஒருசில வலயங்களில் இருந்து பலரும், இன்னும் சில வலயங்களில் இருந்து சிலரும் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இதனால் ஒருசில வலயங்களில் ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாகவும், இன்னும் சில வலயங்களில் ஆசிரியர்கள் இன்றியும் உள்ளமை மாணவர்களின் பெறுபேற்றை உயர்த்துவதற்கு சவாலாக உள்ளது.

ஆசிரியர் இடமாற்றம், அதிகாரிகள் நியமனம் போன்றவற்றில் அரசியல் தலையீடுகளும் கல்வியின் வீழ்ச்சிக்கு காரணமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல பாடசாலைகளை வழிநடத்துபவர்களாக ஆசிரியர்களே உள்ளனர். அதிபர்கள் இன்மையினால் ஆசிரியர்கள் பாடசாலையை பொறுபேற்று நடத்தவேண்டிய நிலையேற்பட்டிருக்கின்றது. நிரந்தரமில்லா பதவியில் இருத்தப்பட்டமையால் முழுமனதுடன் அப்பொறுப்பினையேற்று நடத்துவதில் குறித்த ஆசிரியர்கள் சிரமத்துக்கு உள்ளாகி உள்ளமையும் பெறுபேற்று அதிகரிப்பில் தாக்கத்தினை செலுத்துகின்றது.

பாதிக்கப்பட்ட சமூகத்தினை கட்டியெழுப்புவதற்கான ஆயுதமாக கல்வி உள்ளமையினால் இதனை முறையாக பயன்படுத்தி உயர்நிலையை மாணவர்கள் அடைவதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய தேவையிருக்கின்றது.

பெற்றோர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை ஒவ்வொரு கிராமங்களிலும் முன்னெடுக்க வேண்டும். தொடர்ச்சியாக மாணவர்கள் பாடசாலைக்கு அனுப்புவதை சமூகமட்டத்திலான அமைப்பினரும், அதுசார்ந்த உத்தியோகத்தர்களும் உறுதிப்படுத்த வேண்டும்.

வீடுகளில் கற்பதற்கான சூழலையும், சட்டவிரோத செயற்பாடுகள் அற்ற கிராமங்களையும் ஒழுக்கமுள்ள மாணவர் சமூகத்தினையும் கட்டியெழுப்ப ஒவ்வொரு கிராம மட்டத்திலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சுய கற்றலை ஊக்கப்படுத்துடன், பாடப்புத்தகங்களை வாசிக்கும் திறனை மாணவர்களிடத்தில் வளர்க்க வேண்டும்.

அரசியல் தலையீடின்றி நியமனங்கள் வழங்கப்படுவதுடன், இடமாற்றங்களும் நடந்தேற வேண்டும். பாடசாலைகளை பொறுப்பேற்று நடத்துகின்ற ஆசிரியர்களுக்கு அங்கிகாரத்தை வழங்கி, அவர்களின் மூலமாக உச்சவிளைவினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்ச்சியாக பின்நிலை வகிப்பதனை தவிர்த்து, முன்நிலை பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை, செயற்பாடுகளை அனைவரும் கூட்டாக இணைந்துசெயற்படுத்த வேண்டும்.

இதன்மூலமாக வடக்கு, கிழக்கு மாகாணத்தினை கட்டியெழுப்ப முடியும். இல்லையாயின், கல்வியில் பின்னோக்கு சமூகமாக வடக்கு, கிழக்கினை பார்க்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிடும்.



வீரம், செல்வம், கல்வி தரும்

# ஒன்பது இரவுகள்



சி. சிவமலர்
ஆசிரியை
(சைவ சமயம்)



இருட்பாசையாம்
குழிவீழாமல் காமுவிரண்டு
பேய்கள்
வெருட்டாமல் காஎன்று
வேண்டுகிறேன்
இந்தவினையையும்
பொருட்டாக எண்ணி
அருட்கோல் அளித்தநீ
புன்னகைத்து
புரட்டாசித் திங்களில்
வந்தருள்வாய் அன்ன
பூரணியே.
–(அகத்தியர்)

அறியாமை எனும் இருளைப் போக்கி, ஞான ஒளியை உள்ளமெங்கும் பரவச்செய்யும் பூஜையாகவே, நவராத்திரி காணப்படுகிறது. நவராத்திரி விரதம் இவ்வாண்டு, வியாழக்கிழமை (07) ஆரம்பமாகியது.

புரட்டாதி மாத வளர்பிறை பிரதமை முதல் நவமியீறாகவரும் எட்டு தினங்கள் விரத காலமாகும். ஒன்பதாவது தினம் விஜயதசமி தினமாகும். கடந்த வருடங்களில் பாடசாலைகள், கோவில்கள், வணிக நிறுவனங்கள் போன்வற்றில் கொலுவைத்து, வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர். எனினும், கொரோனா பேரிடர் காரணமாக, பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது; அதேவேளை, கோவில் வழிபாடுகளை மேற்கொள்வதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, நாம் எமது வீடுகளிலேயே இருந்து விரதத்தை அனுஸ்டிப்போம்.

'அவனின்றி அணுவும் அசையாது. அவளின்றி அவன் அசையான்' என சிவத்தில் பாதியாக விளங்கும் சக்தியினை நோக்கி ஒன்பது இராத்திரிகள் அனுஸ்டிக்கப்படும் விரதமே நவராத்திரி ஆகும். தேவி வழிபாட்டின் தொன்மைக்கு கன்னி மாதத்தில் நடைபெறும் நவராத்திரி வழிபாடே சான்றாகும். இவ்வழிபாடு எப்பொழுது தோன்றியதென்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. மிகத் தொன்மை வாய்ந்தது. இச்சக்தி வழிபாடு, சிறிது பெயர் மாற்றங்களுடன் உலகம் முழுவதும் பரவியிருந்திருக்கிறது.

புரட்டாதி மாதத்தில் அமாவாசையைத் தொடர்ந்து வருகின்ற ஒன்பது நாட்களும் நவராத்திரி எனப்படும். பத்தாவது நாள் விஜயதசமி எனப்படும். சக்திக்கு ஒன்பது இராத்திரி; சிவனுக்கு ஒரு இராத்திரி; அது சிவராத்திரி. இதிலிருந்தே சக்தி வழிபாட்டின் மேன்மை விளங்குகிறது.

தமிழர் வளம் பெருக்கி விளைவிக்கும் மண்ணை நிலமகள் என்றார்கள். செல்வத்தை திருமகள் என்றார்கள். கல்வியை கலைமகள் என்றார்கள். வீரத்தை வீரத்திருமகள்(துர்க்கை) என்றார்கள்.

நவராத்திரி தொடர்பான தொன்ம நம்பிக்கையை நோக்குகையில், மகாசங்கார (பேரழிவு) காலத்தின் இறுதியில், இறைவன் உலகைப் படைக்க விரும்பிய நிலையில், 'இச்சை' என்ற சக்தியையும் அது எவ்வாறு தோன்றியது என்று அறிந்த போது 'ஞான சக்தி'யும் தோன்றியுள்ளன. பின்னர் 'கிரியா சக்தி'யால் இறைவன் உலகைப் படைத்தான் என தத்துவ மகிமையாக விளக்கப்பட்டுள்ளது. (இச்சை-விருப்பம்; ஞானம்-அறிவு; கிரியா-செயல்,ஆக்கல்)

இதை அடிப்படையாகக் கொண்டே, முதல் மூன்று நாள்கள் இச்சாசக்தி துர்க்கைக்கும், நடுவில் மூன்று நாள்கள் ஞானசக்திக்கும், இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதிக்குமாக நோற்கப்படுகிறது. அந்த வகையில், ஆண்டுக்கு இருமுறை நவராத்திரி கொண்டாடப்பட வேண்டுமென,



தேவிபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

அந்த வகையில், சித்திரையில் வருவது 'வசந்த நவராத்திரி' எனவும் புரட்டாதியில் வருவது 'சாரதா நவராத்திரி' எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்விரண்டு காலங்களிலும் கோடை, குளிர் என இருபருவகாலமும் மாறும்போது, நோய்நொடிகள் பரவும். இந்த ஆபத்திலிருந்து மக்களைக் காக்கும்படி, தேவியை பூஜிக்கவேண்டும் என்பதால் இவ்விழாவை நடத்தப்படுகிறது. அதிலும், காலசுழற்சியில் வசந்த நவராத்திரி விழா கொண்டாடும் முறை வழக்கொழிந்துவிட்டது. சாரதா நவராத்திரி விழா இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை சிறப்பு.

நவராத்திரியின் சிறப்பு, அனுஸ்டிக்க வேண்டிய முறை, கிடைக்கும் பலன்கள் பற்றி, தேவி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. முன்னொரு காலத்தில் நிசும்பன், சும்பன் என இரு அசுரர்கள் இருந்துள்ளனர். அவர்கள் கடவுளிடம் பல வரங்களைப்பெற்று, தங்களை அழிக்க யாரும் இல்லை என்ற ஆணவத்தோடு ஆட்சி செய்த காலத்தில், மக்களை பெரும் துன்பத்தில் ஆழ்ந்தார்கள். இந்த அசுரர்களின் ஆணவத்தை அடக்கத் திண்ணம் கொண்டு, மகா விஷ்ணுவிடமும் சிவனிடமும் முறையிட்டனர்.

அவர்கள் பிரம்மனையும் சேர்த்துக்கொண்டு, இந்த அசுரர்களை அழிக்கும் சக்தி அன்னை ஆதிசக்தியிடமே உண்டு என்பதை அறிந்து, தேவியை பூலோகத்துக்கு அழைத்தனர்.

மும்மூர்த்திகளும் தாங்கள் சக்திகளையெல்லாம் ஒன்றாக்கி, தேவிக்கு அளித்துவிட்டு சிலையென நிற்கவே இந்திரன், அட்டத்திக்கு பாலகரும் தங்கள் ஆயுதங்களையெல்லாம் தேவிக்கு அழித்துவிட்டு சிலையாகவே காட்சி தந்தார்கள். இவர்கள் இப்படி சிலையாக நிற்கும் காட்சியே, கொலு வைக்கும் மரபாக வந்தாக அறிய முடிகின்றது.

இவ்வாறாக போர்கோலம் பூண்டதேவி, நிசும்பன் - சும்பன் எனும் இரு அசுரர்களையும் அழித்து, தர்மத்தை நிலைநாட்டினார். அவள் வெற்றி பெற்ற தினமே விஜய தசமியாகும். போர் ஒன்பது நாள்கள் விடாது நடைபெற்றது. ஆனாலும் அக்கால போர் சட்டதிட்டங்களின் படி, மாலை நேரம் சூரிய அஸ்தமனத்தின் பின்னர் போர் புரிவதை நிறுத்தி விடுவார்கள். அவர்கள் ஓய்வெடுக்கும் நேரத்தில் அன்னையின் படைக்கு உந்துதல் கொடுக்கும் வகையில், அன்னையை குறித்து ஆடல், பாடல், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளதையும் அறிய முடிகின்றது. எனவே, இரவில் இந்நிகழ்வு நடைபெறுவதாலே நவராத்திரி எனவும் கொள்ள முடியும்.

நவராத்திரி குறித்த இன்னுமொரு கதையை பார்ப்போமாக இருந்தால், வரமுனி என்ற பெரும் சக்திவாய்ந்த முனிவர் ஒருவர் இருந்துள்ளார். அவர் சகலவற்றிலும் சிறந்து விளங்கியவர். தான் மட்டுமே சிறந்தவர் என்ற மமதையில் அகத்தியர் போன்ற பெரும் முனிவர்களை மகிஷம்(எருமை) போல உருவம் கொண்டு அவமரியாதையாக நடத்தவே, இதனால் கோபம் கொண்ட முனிவர்கள் அனைவரும் எருமையாகவே போவாய் என சபிக்கின்றனர். முனிவர்களின் சாபமும் பலித்து, அசுரனின் வாரிசாக மகிஷன் பிறந்தான்.

இவன், பிரம்மனை நோக்கி தவமிருந்து தனக்கு தேவர்கள், அசுரர்கள், மானிடர்களால் மரணம் நேரக்கூடாதெனவும் கன்னிப்பெண்ணால் தான் மரணம் ஏற்படவேண்டுமென வரம் பெற்று, அராஜக அதிகாரம் செய்கிறான். இதை பொறுத்துக்கொள்ள முடியாத தேவர்கள் மகாவிஷ்ணுவை தஞ்சமடைந்து மகிஷாசுரனை தண்டிக்குமாறு வேண்டவே, விஷ்ணு தேவியை பூலோகத்துக்கு அழைக்க தேவியும் சர்வலங்கார பூஷிதையாக, மகிஷனை வதம் செய்து அநீதியை அழிக்கிறாள். அன்றைய தினமே நவமியாகும். இதற்காக அன்னை ஒன்பது நாள்கள் ஊசி மீது தவமிருந்ததாகவும் அதனாலேயே நவராத்திரி காலத்தில் ஊசிகொண்டு துணிகளைத் தைப்பது தவிர்க்க வேண்டுமென ஐதீகம் இருப்பதாகவும் அறியமுடிகிறது.

மேலும், இந்த விரதத்தை தெய்வங்கள் முதல் தேவர்களும் கடைப்பிடித்து பயனடைந்துள்ளதையும் அறியமுடிகிறது. உதாரணமாக இராமர், இராவணனிடமிருந்து சீதையை மீட்டது. பஞ்சபாண்டவர்கள் பாரதபோரில் வென்றமை. இதனூடாக அறியப்படுவது, தீய சக்திகள் மேலோங்குகையில் அம்பாள் காத்து அருள் புரிவாள் என்பதாகும்.

இதில் அறிவியல் காரணமும் இருக்கிறது. இந்த ஒக்டோபர் மாதம் என்பது மழை பெய்யும் காலம். இந்தப் காலங்களில் இரவு நேரம் குறைவாக இருக்கும். எனவே, சீதோஷ்ண நிலைக்கு நம் உடலை மாற்றும் வகையிலேயே நவராத்திரி பண்டிகைகள் கொண்டாடப்படுகிறது. இந்த ஒன்பது நான்களிலுமே பூஜை செய்யப்பட்டு, சுண்டல் போன்ற புரதம் அடங்கிய உணவுகள் சாப்பிடுவதால் உடலும் தெம்புபெறும். நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும்.

நவராத்திரியில் ஒன்பது நாள்களும் பூஜை, விரதம் அனுஷ்டிக்க வேண்டும். இயலாதவர்கள் அஷ்டமி நாளில் மட்டுமாவது விரதமிருத்தல் வேண்டும். தசமி தினத்தில் வதம்செய்து வாகை சூடியதால், ஆணவம் சக்தியாலும், வறுமை செல்வம் ஆகியவற்றாலும் அறியாமை ஞானத்தினாலும் வெற்றி கொள்ளப்பட்ட நாள் என்பதால், முப்பெரும் தேவியை வணங்கி, எல்லாக் காரியங்களும் எளிதில் வசமாகவும் அன்றைய தினம் புனிதமான காரியங்களை தொடங்கி, இந்த ஜென்மத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, பிறவிப் பயணாகிய பேரின்ப நிலையை அடைவோமாக!

# வடமாகாண கடற்றொழிலாளர்களின் தொழிலைப் பாதுகாக்கவும்

என்னதான் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்தாலும், கடல் எல்லையை மீறும் செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. அத்துமீறல்களால், வடமாகாண கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஐந்து வருடங்களில் மட்டும், 500 மில்லியன் ரூபாய் இழப்பு அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துமீறுகின்ற இந்திய மீனவர்கள், இழுவை வலையை (ரோலர்) பயன்படுத்தி, முழு மீன்வளத்தையும் கொத்தோடு அள்ளிச் செல்கின்றனர். இடையூறாக இருக்கும் வடமாகாண மீனவர்களை தாக்கி காயப்படுத்துவதுடன், பெறுமதிமிக்க வலைகளை அறுத்தெறிந்தும் படகுகளையும் துவசம் செய்தும்விடுகின்றனர்.

யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், வடகடலுக்குள் தென்னிலங்கை மீனவர்களின் நுழைவு அதிகரித்திருந்தது. அவர்களும் வடமாகாண மீனவர்களின் பெறுமதி மிக்க வலைகளை அறுத்தெறிந்துள்ளனர். அதன்பின்னரான இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் இன்னும் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன.

இந்திய மீனவர்களால் வடமாகாண மீனவர்கள் மீதும் வளங்கள் மீதும் மேற்கொள்ளப்படும் அடூழியங்களை நிறுத்துவதற்கான செயற்பாடுகளை இராஜதந்திர ரீதியிலேயே அணுகவேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டாலும் அவையாவும் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளன.

இந்நிலையில்தான் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ச் ஸ்ரீ வர்தன் ஷ்ரிங்கலாவைச் சந்தித்திருந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய மீனவர்களின் அட்டகாசத்தால், வடமாகாண கடற்றொழிலாளர்கள் இழந்தவற்றை புள்ளிவிவரங்களுடன் எடுத்துரைத்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது, இரண்டு நாடுகளும் 'இணைந்த கடல் பாதுகாப்பு குழு' ஒன்றினை உருவாக்கி, பாக்கு நீரிணை, மன்னார் விரிகுடா பிரதேசத்தின் வளங்களைப் பாதுகாப்பதற்கான தீர்மானங்களை மேற்கொள்ளும் வரையிலும் சட்ட விரோத தொழில் முறையான இழுவை வலைத் தொழிலையை நிறுத்துவது தொடர்பில் முன்வைக்கப்பட்ட முன்வரைபையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஞாபகமூட்டியுள்ளார்.

சட்டவிரோதமான உள்நுழைவு மற்றும் வடமாகாண கடற்றொழிலாளர்கள் மீதான இந்திய மீனவர்களின் அட்டூழியங்கள் நிறுத்தப்படவேண்டும்; இரண்டு நாட்டு அரசாங்கங்களும் இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றை ஏற்படுத்தியாக வேண்டும். இல்லையேல், வடமாகாண கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்பைச் சந்திப்பர்.

கொரோனா தொற்றுக்காலத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருந்தமையால், தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறவில்லை. எனினும், அத்துமீறிய மீன்பிடிப்பு, சட்டவிரோதமான கடத்தல்கள் தொடர்பில் செய்திகள் வெளிவந்திருந்தன.

கடல் எல்லையை மீறிய வேளையில் கைதுசெய்யப்படும் இந்திய மீனவர்கள், பலரும் நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர், இருநாடுகளுக்கு இடையிலான நல்லெண்ணத்தின் பிரகாரம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும், அத்துமீறல்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

கடல் எல்லையை மீறாத வகையிலான தொழில்நுட்பங்களை மீனவர்களுக்கு வழங்கவேண்டும் என்பதுடன் இப்பிரச்சினைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வை காண்பதே பொருத்தமானது.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மௌனத்துக்கு ஓசைகள் உண்டு; அவை தீட்சண்யமானவை. உள்ளத்தில் புதுப்புது அதிர்வலைகளை உருவாக்கும். வெளிஉலகில் எவருக்கும் கேட்காத பட்சத்தால், சுத்திரமாகவே அவை இயங்குகின்றன.

நல்ல எண்ணங்களுடன் வாழ்பவர்களுக்கு மௌனத்தின் மூலம், பற்பல உயர்ந்த கருத்துகளை உருவாக்கிய வண்ணம் இருக்கும்.

சந்நியாசிகள், ஞானிகள் பேசாமல் இருந்தபடியே, நற்சிந்தனைகளை உருவாக்கினார்கள். அதிகம் பேசினால்கூட, அறிவுநிலையின் ஓட்டம் தடைப்படலாம்

அளவோடு பேசுவதும் தனிமையில் தனக்குத் தானே உரையாடுவதும் அறிவோடு சங்கமிக்கும் நிலை.

நெஞ்சத்துக்கு அழகூட்டும் உரை, அறிவை விரிவடையச் செய்து, தனது பரந்த எழுச்சியை எமக்கு ஊட்டும். கண்டபடி உள்ளத்தை உறுத்தாமல், அமைதியைப் பற்றிக்கொள்க! அதுவே ஞானம் பெறும் மார்க்கம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஆசிரிய வாண்மைத்துவப் பல்கலைக்கழகம்:

# அவசியம் உணராதது ஏன்?

லக்ஸ்மன்

சர்வதேச ரீதியில் அபிவிருத்திப் பொருளாதாரத்தின் விருத்தியை அடிப்படையாகக் கொண்டு சகல துறைகளும் வாண்மைத்துவம் மிக்கதாக மாற்றமடைந்திருக்கின்றன. இச் சூழ்நிலையில் இலங்கை போன்ற வளர்முக நாடுகள், சர்வேதச சந்தைப் போட்டியிலில் வாண்மைத்துவப் போட்டிப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய முடியாமல் திண்டாடுகின்றமை வெளிக்கிளம்பி நிற்கின்றது.

இத்தகைய சூழ்நிலை காரணமாக, நாட்டினுடைய தேசிய அபிவிருத்தி என்பது பொருளாதாரப் பொறிமுறை மூலோபாயத்தின் வளர்ச்சிப் படிநிலையில் துறைசார் வாண்மைத்துவ செயல்நிலை இன்மையின் பற்றாக்குறையினையே வெளிப்படுத்தி நிற்கின்றது. இன முரண்பாடுகளும் தொடர்ச்சியான யுத்தமும் சர்வதேச இராஜரீக அணுகுமுறைகளும் எமது நாட்டின் தேசிய இலக்குகளை அடைவதற்கான வீரியமின்மையை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன.

அந்த வகையில், எதிர்கால சந்ததியினரைத் தயார்படுத்தி நிற்கும் ஆசிரிய கல்வி முறைமைகளினதும், அதன் பயிற்சி வழிகாட்டல் நிலைகளினதும் மிக மோசமான பின்னடைவுகளே இலங்கை நாட்டின் இறையாண்மையினையும் அரசியல் கொள்கைகளினையும், பொருளாதார அபிவிருத்தி முறைமைகளினையும், செயற்பாட்டு ரீதியான தளம் நோக்கிய பயணிப்பின் பின்னடைவிற்கான காரணங்களாக முன்வைக்கப்படுகின்றன.

வாண்மைத்துவ சேவைகளை உற்பத்தி செய்தும் அதனை வளம்படுத்தியும் நிற்கின்ற ஆசிரிய சேவையானது வாண்மைத்துவமின்றிக் காணப்படுவதனால் பல்வேறு பிரதிகூலங்கள் உருவாகின்றன. இந்நிலையில், இலங்கையினுடைய தேசிய அபிலாஷைகளையும் நிறை பொருளாதார உற்பத்தி முறை நோக்கிய செயற்பாட்டு ரீதியான கல்வி முறைமைகளையும் அதனை உறுதிப்படுத்துகின்றதான நடைமுறை சார் கொள்கை வகுப்பினையும் பயில் வழிப்படுத்தல்கள் மூலம் முன்வைக்கின்ற வாண்மைப் பலம் பொருந்திய எதிர்கால ஆசிரிய படையணி ஒன்றே தேவையாகும்.

கடந்த தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜனாதிபதி கோட்டாபயவின் அதிகார மையத்துக்கு உட்பட்ட அரச அதிகார முறைமையின் கீழ் முன் மொழியப்பட்ட சுபீட்சத்துக்கான எதிர்காலம் என்ற தேர்தலுக்கான வேலைத்திட்டத்திற்கு அமைவாக, இலங்கையின் பல்துறை சார் உற்பத்திக் கொள்கைகளை அமலாக்குகின்ற, நடைமுறைப்படுத்துகின்ற தேசிய இலக்குகள் நோக்கிய பயணிப்பின் அடிநாதமாக விளங்குகின்ற ஆசிரிய படையணியின் வாண்மைத்துவம்மிக்க செயலொழுங்கின் கட்டுறுதிமிக்க மேற்பார்வை, அவதானிப்பு, செயற்பாட்டு ரீதியான செயன்முறைகள் பலவீனமடைந்துள்ள சூழ்நிலையில் அதனை பக்க விளைவுகளிலிருந்து மீட்டு எடுப்பதற்கான வேலைத்திட்டமாக இலங்கை ஆசிரியர் படையணியை வாண்மைத்துவம் மிகுந்த படையணியாக கட்டியெழுப்புவதற்கான அடிப்படை வேலைத்திட்டம் மிகுந்த செயலூக்கப் பொருத்தப்பாடுடையதாகும்.

அதற்காக தேசிய கல்விக் கல்லூரிகளையும் ஆசிரிய கலாசாலைகளையும் ஆசிரிய மத்திய நிலையங்களையும் ஒன்றிணைத்து அங்கு பணியாற்றுகின்ற இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் அங்கத்துவம் வகிக்கும் நிரந்தர தொழில் வல்லுநர்களை அடிப்படையாகக் கொண்டு, சுயாதீன கல்விப் பல்கலைக்கழகம் ஒன்றினை ஸ்தாபிப்பதல் முக்கியமானதாகும்.

உலகளாவிய ரீதியில் பல நாடுகள் ஆசிரியர் கல்விக்கான அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை உயர்வினைத்திறன் கொண்ட நிறுவனங்களாக நிர்வகிக்கின்றன. உலகளாவிய கல்விப் போக்கில், ஆசிரியர் கல்விக்கான தரம் மற்றும் உள்ளீர்ப்பு முறைகள் உயர் தகைமை கொண்டதாக காணப்படுகின்றது. ஆசிரியர் வாண்மைக்கான கல்வித்தரமும் நிறுவனக் கட்டமைப்பும் உயர்நிலைகொண்டதாக உள்ளன. அவை ஆசிரியர்களுக்கான தனித்துவமான கல்வியினை வழங்குகின்றன.

இவ்வாறு பல பல்கலைக்கழகங்கள் தனித்துவமான ஆசிரியர் கல்விக்கான பல்கலைக்கழக கல்லூரிகளை உருவாக்கி நிர்வகித்து வருகின்றன. இவ்வாறான புரிதல்கள் வழியில் நாம் எமது நாட்டுக்கான ஆசிரியர்களின் வாண்மைத்துவ நிலைக்கான நிறுவனவாக்கத்தினை உருவாக்க உழைத்தல் அவசியமாகின்றது.

ஆசிரியர் கல்விக்கான தனிச்சிறப்புமிக்க பல்கலைக்கழகம் என்பது பல நிறுவனக் கட்டமைப்பு கொண்டதாக சிந்திக்கப்பட வேண்டும். அப்போதுதான் கால நீட்சியில் புலமையாளர்களையும் சுதந்திரமான ஆசிரியர்களையும் கல்வி பற்றிய தேடல்களையும் கொண்ட சுதந்திரமான நிறுவனமாக வளர வாய்ப்புண்டு.

அந்தவகையில்தான் ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்றின் உருவாக்கம் என்பது நாட்டின் அபிவிருத்திச் சுட்டியில் பெரும் மாற்றங்களை உருவாக்கும்.

இந்தப்பின்புலத்திலே, இலங்கை ஆசிரிய சேவை தாபிதமானது அதன் ஆசிரிய அங்கத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மீள் கட்டமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது. இந்த வகையில் இந்தமீள் கட்டமைப்புக்கான அச்சாணியாக சர்வதேச சமூகப் பொருளாதார, அரசியல், அபிவிருத்தி உற்பத்தி முறைகளுக்கு அமைவாக அதன் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய வகையிலும் எமது தேசத்தின் தேசிய இலக்குகளை அடையக் கூடிய வகையிலும் நாட்டுக்குப் பொருத்தமுடைய சமூகக் பொருளாதார பாரம்பரிய கலை பண்பாட்டு அம்சங்களைப் பேணுகின்றதும் வளங்குகின்றதுமான நற்பிரஜைகள் சார் உற்பத்தி முறைமையினை உற்பத்தி செய்கின்ற முறைமையும் ஆசிரிய வாண்மைத்துவக் கல்வி முன்மொழியப்பட வேண்டும்.

அந்த வகையில் இலங்கையில் இந்தக் கல்வி முன்னெடுப்புக்களை செயற்படுத்தி வருகின்ற ஆசிரிய கல்வியியலாளர் சேவையினரின் புலமை சார் புலமையினை முழுமையாகப்பயன்படுத்தி ஆசிரியர்களுக்கான சுயாதீனப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

இந்தஅடிப்படையில் நாட்டினுடைய எதிர்காலம் கருதி கட்டுறுதிமிக்க எதிர்கால சுபீட்சத்துக்கு உதவக்கூடிய வகையில் வளப்பற்றாக்குறையுடன் கல்லூரிகளுக்குள் முடக்கி வைக்கப்பட்டுள்ள ஆசிரிய கல்வியியலாளர் சேவையினையும், அவர்கள் பணிபுரியும் நிறுவனங்களையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் ஒன்றிணைத்து கல்விக்கான சுயாதீன பல்கலைக்கழகம் உருவாக்குவதன் மூலமே இந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாடுடையதும் தன்நிறைவுடையதுமான பொருளாதார அபிவிருதி உற்பத்தி முறைகளினையும், நாட்டுக்குத் தேவையான பிரஜைகளையும் உற்பத்திசெய்ய முடியும்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளை இணைத்து ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகம் ஒன்றினை ஸ்தாபிப்பதற்கான செயற்படுகள் கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டருந்தாலும் அது அமைச்சரவை அங்கிகார பத்திரம் வரை சென்று, இப்போது அது நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாக இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தொழிற்சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையை நடத்துகின்ற சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக கல்வியற் கல்லூரிகளிலும் ஆசிரியர் கலாசாலைகளிலும் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதே நேரம், இரண்டாம் வருட பயிற்சி ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் நிகழ்நிலை வகுப்புக்கள், கணிப்பீடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் நடைபெறவில்லை. அத்துடன், மூன்றாம் வருட மாணவர்களின் கணிப்பீட்டுப் பணிகளிலிருந்து விரிவுரையாளர்கள் விலகியிருக்கிறார்கள். பரீட்சை, புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தல், கணிப்பீடு தொடர்பான உரிய நிறுவனங்களுடனான பணிகளும் நடைபெறமாலிருக்கின்றன.

ஜனாதிபதியின் சுபீட்சமான எதிர்கால நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட தாதியர் கல்வி, ஆசிரியர் கல்விக்கான பல்கலைக்கழகம் ஆகிய இரண்டினை ஸ்தாபிப்பதற்காக பல்கலைக்கழக சட்டமூலத்தை திருத்தி முன்னாள் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் 2020 டிசம்பரில் அமைச்சரவை பத்திரம் முன்வைத்து அனுமதியை பெற்றவுடன் விசேட நோக்கங்களுக்கான பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தச் செயன்முறையினை தடுப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக அறிய முடிகிறது. தற்போது கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனக்கு இந்நிலைமை தொடர்பாக தெரியப்படுத்தி, பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. இதற்குள் நடைபெறுகின்ற கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் எதுவும் பயனற்றதாகவே இருந்து வருகின்றன. தற்போது நடைபெற்றுவரும் அதிபர்-ஆசிரியர்களின் போராட்டத்திற்கு எவ்வாறு உந்துதல்கள், ஒத்தாசைகள், ஆதரவுகள் இல்லையோ அதே போன்றே இதிலும் காணப்படுகிறது. அதனை நிவர்த்திக்க வழிகள் தேடப்படவில்லை என்பதே உண்மை.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தை மாற்றத்திற்குள்ளாக்கி கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகளினதும் விரிவுரையாளர்களினதும் கருத்துக்களுக்கு இடமளிக்காது இதுவரை கல்வியியற் கல்லூரிகளில் பண்புத்தரம் தொடர்பாக கவனம் செலுத்தாத தேசிய கல்வி நிறுவகத்தின் ஒருசில அதிகாரங்களின் அழுத்தம் காணப்படுவதாகவே கல்வியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது ஏன் என்பது மாத்திரமே இந்த இடத்தில் கேள்வி. கல்வி அமைச்சரால் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்கப்பட்ட விடயத்தை நடைமுறைப்படுத்துவதில் என்ன இடர்பாடு என்பதன் விளக்கமே இதற்குப் பதிலாகும்.

## கடிதங்கள்

ஆத்திமோட்டை, சுராய்

### விவசாய கிராமங்களின் நிலை

மன்னார் மாவட்டத்தில், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஆத்திமோட்டை, சுராய், சீது விநாயகர் புரம் போன்ற விவசாயக் கிராமங்களின் தேவைகள் தொடர்ந்தும் நிறைவு செய்யப்படாமையால் குறித்த கிராமங்களில் வாழ்ந்த 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களில், தற்போது 150 இற்கும் குறைவான குடும்பங்களே வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில், குறித்த கிராமங்களின் வசதிக்குறைபாடுகள் காரணமாக, 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பிரதேசங்களிலிருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளன.

இப்பிரதேசத்தில் இயங்கிய ஆத்திமோட்டைப் பாடசாலை, தற்போது கள்ளியடிப் பாடசாலையுடன் இணைப்புப் பாடசாலையாக இயங்கி வருகின்ற போதும், சுராய் கிராமத்தில் பாடசாலை பல்வேறு தேவைப்பாடுகள் காணப்பட்டாலும் குறைந்தளவு மாணவர்களுடனேயே இயங்கி வருகின்றது.


முன்பு 80 வரையான குடும்பங்கள் வாழ்ந்த ஆத்திமோட்டை கிராமத்தில், 13 குடும்பங்களும் 120 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த, சீது விநாயகர் புரத்தில் 36 குடும்பங்களும் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த சுராய் கிராமத்தில் 100 வரையான குடும்பங்களும் மாத்திரமே வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில், இக்கிராமங்களுக்கான பிரதான வீதி, குடியருப்பு வீதிகள் என்பன இன்றுவரை புனரமைக்கப்படாத நிலை காணப்படுகின்றது. இதைவிட, காட்டு யானைகளின் தொல்லை, மருத்துவ வசதியின்மை போன்ற பல்வேறு பிரச்சினைக்கு முகங்கொடுத்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

-யது பாஸ்கரன்

## இஷாலினியின் விவகாரத்தில்

# எழுந்த முரண்பாடு


யதுஷா ரவித்தியாகராஜா
rtyadhun26@gmail.com

**முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்து உயிரிழந்த, தலவாக்கலை டயகம மேற்கு பிரிவு 3யைச் சேர்ந்த ஜூட்குமார் இஷாலினி, தீக்காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஜூலை மாதம் மூன்றாம் திகதி அனுமதிக்கப்பட்ட நிலையில், 12 நாள்களின் பின்னர் உயிரிழந்த சம்பவம், மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியது.**



சிறுமி மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டதாகவும் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தபட்டதாகவும் சந்தேகிக்கப்பட்டது. இந்தச் சம்பவம், அரசியலாக்கப்பட்டு இனரீதியாகப் பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டதால், இஷாலினியின் மரணத்துக்கான சரியான காரணம் வெளியாகவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளது.

16 வயது மலையகத்து சிறுமி, அரசியல்வாதியின் வீட்டில் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு, தீக்காயங்களுடன் மரணித்ததாகக் கூறப்படும் சம்பவத்தை மையப்படுத்தி, இரு சமூக மக்களிடையில் இன முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கான சில முயற்சிகள் இடம்பெற்றன.

இச்சம்பவத்தைப் பற்றி, அரசியல்வாதிகள் சிலர் கருத்துகளை முன்வைத்தனர். அதனூடாக அரசியல் இலாபம் பெற முயன்றதோடு, இரு இனங்களுக்கு இடையில் நல்லுறவில் முரண்பாட்டை ஏற்படுத்த எத்தனித்தனர்.

முஸ்லிம் பிரஜை வீட்டில் நடந்த வன்முறைக்கு, ஒட்டுமொத்த இனத்தவரும் தவறானவர்களெனச் சுட்டிக் காட்டியது சரியா? அதேபோன்று, குடும்ப நிலை காரணமாக, வேலைக்கு அமர்த்தப்பட்ட தமிழ் சிறுமி, காசுக்கு ஆசைப்பட்டு பாலியல் தொல்லைகளை ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படும் கருத்தால், மொத்த மலையக சமூகத்தினரும் காசுக்கு ஆசைப்பட்டவர்கள் எனக் கூறுவதும் சரியா?

பாடசாலைக்குச் செல்ல வேண்டிய சிறுமி, பணிப்பெண்ணாகச் சென்றதன் காரணம் என்ன என்பது தொடர்பில் அவருடைய குடும்பத்தாரிடம் வினவியபோது, " வேலைக்குச் சென்றதன் முக்கிய காரணம் குடும்ப வறுமை" என தெரிவித்தனர். வேலைக்குச் சென்றதிலிருந்து ஒரு முறையேனும் வீட்டிற்கு வரவில்லை என்றும் சில மாதங்கள் மாத்திரமே வீட்டுக்கு தொலைபேசி வழியாகத் தொடர்பிலிருந்தார் எனவும் சம்பவம் இடம்பெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் எவ்விதமான தொடர்பும் குடும்பத்தாருடன் இருக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தனர்.

'வறுமை எனப்படும் துன்பமொன்றின் உள்ளாகவே உலகத்தாரால் சொல்லப்படும் பல வகைப்பட்ட துன்பங்கள் எல்லாம் சென்று அடங்கிவிடும்' என்ற கூற்று இஷாலினியின் கதைக்கு மிகவும் பொருத்தமாகவே உள்ளது.

அதிகமாகப் பெண்களே வீட்டு வேலைக்கு சேர்க்கப்படுகிறார்கள். அதிலும் பெரும்பாலானவர்கள், குழந்தை தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருப்பதிலேயே அதிக விருப்பம் காட்டுகின்றார்கள். இதற்குக் காரணமாக அமைவது, சிறுவர்களிடம் வேலை வாங்குவது இலகு; அவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளத்தை வழங்கி அதிக நேரம் வேலை வாங்க முடிவதோடு அவர்கள் தப்பிச் செல்ல முயல்வதும் குறைவு என்பன எனத் தெரியவருகிறது.

இஷாலினி தொடர்பில், டயகம பிரதேச பொது மக்கள் சிலரிடம் வினவிய போது அவர்கள் பின்வருமாறு கருத்து தெரிவித்தனர். "இஷாலினியை வேலைக்கு அனுப்பியதற்கு முக்கிய காரணமாக வறுமையை மாத்திரம் கூற முடியாது. ஏனெனில் மலையகத்தவர்கள் பெருந்தோட்டத் தொழில்களை மாத்திரம் நம்பி இருந்ததெல்லாம் 15 வருடங்களுக்கு முற்பட்ட காலம். தற்காலத்தில் சுயதொழில் பலவற்றையும் செய்து வாழ்வாதாரத்தை பூர்த்திசெய்து வருகின்றனர். ஆகவே வறுமைக் காரணமாகவே 16 வயது சிறுமியை வேலைக்கு அனுப்பியதாகக் கூறப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது" என பிரதேசவாசி ஒருவர் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது, 16 வயதுடைய சிறுமியை வேலைக்கு அனுப்பியது, பெற்றோரின் தவறு. வேலைக்கு அழைத்து சென்ற தரகர், சிறுமியை வேலைக்கு அமர்த்திய உரிமையாளர் மீதும் தவறுண்டு. இது போன்று இன்னுமோர் இஷாலினி உருவாகாமல் இருக்க வேண்டுமானால் சிறுவர்களை வேலைக்கு அனுப்பும் பெற்றோர்களுக்கும் தரகர்களுக்கும் வேலைக்கு அமர்த்தும் உரிமையாளர்களுக்கும் தண்டனை வழங்கப்பட்டாலே பல சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்க முடியும் என இன்னுமொரு பிரதேசவாசியொருவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் எண்ணக்கருத்து இவ்வாறு இருக்க, சட்டரீதியில் நோக்குவோமானால் இவ்வழக்கு விசாரணையுடன் தொடர்புடைய சட்டத்தரணி ருஷ்டி ஹபிட்டைத் தொடர்புக்கொண்டு கேட்டபோது, பின்வருமாறு கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

"ஆரம்ப கட்டத்தில், இந்த விடயம் பொரளை பொலிஸாரால் விசாரிக்கப்பட்டது. பின்பு மேல் மாகாண பொலிஸ்மா அதிபரால் கிருலப்பனை பெண்கள் மற்றும் சிறார்கள் சம்பந்தப்பட்ட பொலிஸ் குழுவாலும் விசாரிக்கப்பட்டு, தற்போது இந்த வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறுகிறது. அதன் பிரகாரம் ரிஷாட் பதியுதீன் உட்பட 5 பேர், சந்தேக நபர்களாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்ட வைத்திய அதிகாரிகளால் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட ஆவணங்களின்படி இது கொலை என முடிவு பெறவில்லை. உயர்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தில், இதுவொரு தற்கொலையாக இருந்திருக்கலாம் என கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது சிகிச்சையளித்த வைத்தியரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை ஏற்றுக் கொள்ளமுடியாது எனக் கூறியதற்கமைவாக, இரண்டாவது பிரேத பரிசோதனை நடந்தது. இது முதலாவது பரிசோதனைக்கு பாரிய மாற்றமாக அமையவில்லை எனவும் வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர். தொடர்ந்தும் நீண்ட நாள்களாக பாலியல் உறவில் ஈடுபடுத்தப்பட்டிருந்தற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும் இச்செயற்பாட்டை இந்த வீட்டில் யாராவது செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இஷாலினி, தனது குடும்பத்தாரிடம் இது தொடர்பான எவ்வித கருத்துகளையும் தெரிவிக்கவில்லை. ஒரு சில சம்பவங்கள் மட்டுமே கூறியுள்ளார் என்பது அவர்களின் பொலிஸ் முறைப்பாட்டின் மூலம் அறியமுடிவதோடு அது தொடர்பாக எவரையும் கைது செய்யவில்லை" எனவும் கூறியுள்ளார்.

ஆரம்பக்கட்ட விசாரணையில் பிள்ளையின் பெற்றோர், இவ்வாறாக முறைப்பாடுகள் எதுவும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. பின்பு ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவிக்கையில்முன்னாள் அமைச்சர் ரிஷாட்டுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தமை அவர்கள் சிலரால் திசைதிருப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இச்சிறுமியின் இறப்பு கொலையாக இருக்குமா என்ற வகையிலும் பொலிஸாரால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது. ரிஷாட் பதியுதீன் வீட்டுக்கு வேலைக்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் அழைத்து சென்ற தருணத்தில், இப்பிள்ளை 16 வயது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாகவும் அச்சமயத்தில் 14 வயது பூர்த்தி செய்யப்பட்டவர்களை வீட்டுவேலைக்கு அமர்த்த முடியும் என்று சட்டம் இருந்தாகவும் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் 16 வயதிற்கு குறைந்த யாரும் வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட முடியாது என திருத்தி அமைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளதோடு இச்சிறுமிக்கு நடந்தது கொலையா, அசம்பாவிதமா, தற்கொலையா என்பதற்கான விசாரணைகள் தற்போது நடைபெறுவதாகவும் இரு தரப்பினருக்கும் நியாயமான தீர்ப்பு அமைய வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது முழுமையான வழக்கு விசாரணை சாட்சியங்களுடனான குற்றத்தீர்ப்பளிப்பதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை எனவும் புலன் விசாரணைக்காக மேலதிக அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, சட்டமா அதிபருடாக அவசியப்படின் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் அல்லது நீதவான் நீதிமன்றத்தில் முழுமையாக விசாரிக்கப்பட்டு முடிவு பெறவும் வாய்ப்புகளுண்டு. நீதவான் அவர்களின் முடிவைத் தொடர்ந்து குற்றவியல் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும். சந்தேக நபர்கள் அனைவரும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பதற்காக நீதவான் நீதிமன்றத்திற்கு கட்டுப்பட்டிருக்கின்றனர். அந்தவகையில் இவ்வழக்கு நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது எனவும் சட்டத்தரணி கூறியுள்ளார்.

மலையகத்தில் வறுமைதான் கல்விக்குத் தடையாக உள்ளது என்றால் மலையகத்திலிருந்து வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள், பொறியியலாளர்கள் உருவாகவில்லையா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

பெரும்பாலும், சாதாரண தரத்தை பூர்த்தி செய்து, பெறுபேற்றுக்காகக் காத்திருக்கும், பின் தங்கிய பகுதிகளில் வசிக்கும் மாணவர்களே நகர்புறங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அவ்வாறான மாணவர்களுக்கு கைத்தொழில், தொழில்நுட்பம் தொடர்பான கற்கைநெறிகளை வழங்குவதன் மூலம் மாணவர்களின் எதிர்காலத்தை சிறப்பாக்கலாம்.

# செதுக்கப்படாத மறுபாதி

ரவிச்சந்திரன் பிரஷாஹினி
(ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
நான்காம் வருடம்)
prashaprashahini@gmail.com





மலையகம் என்ற உடனே ஞாபகம் வருவது தேயிலைகள் தான். அது என்னவோ, ஒரு பக்கம் சார்பாக பேசி வருபவர்கள் மலையகத்தின் மறுபாதி பக்கத்தை மறந்துவிடுகின்றனர். மலையக மக்களின் அன்றாட வாழ்க்கை தேயிலை செடியினை மட்டுமே நம்பியதாக இல்லை. அம்மக்களின் பொருளாதாரத்தில் இறப்பர் மரமும் பாரிய பங்காற்றி வருவதை பற்றி யாரும் அவ்வளவாக பேசவில்லை என்பதே உண்மை.

மலையகப் பிரதேசங்களில் பொறுத்தவரையில் குறிப்பாக இறப்பர் மரத்தினையும் இறப்பர் பாலையும் நம்பியும் அன்றாடப் பிழைப்பு உள்ளது.

பதுளை மாவட்டத்தின் ஹொப்டன் பிரதேசத்தில் வாழ்கின்ற ஒரு சிறிய குடும்பம் அது. பெருந்தோட்ட நிர்வாக ரீதியாக இறப்பர்பால் உற்பத்தி ஒருபுறம் இருந்தாலும், சுய தொழிலாக இறப்பர் உற்பத்தி செய்பவர்கள் இவர்கள் என்பதை சமரவீரவுடனான உரையாடல் மூலமாக அறியமுடிந்தது.

அந்த சிறிய உரையாடலை எமது வாசகர்களுக்காக கேள்வி, பதிலாக தருகின்றோம்.

**கே: பொதுவாகவே இந்த இறப்பர் உற்பத்தியினை நீங்கள் எவ்வாறு மேற்கொண்டு வருகிறீர்கள்? பாலாக இருந்து இறப்பர் சீட்டாக மாற்றுவதற்கு இடையிலான வேலைகள் எப்படியானவை?**

பதில்: குறிப்பாக நான், என் மனைவி இரண்டு பேரும் இணைந்து இதனை செய்து வருகிறோம். ஒரு சிறிய இறப்பர் தோட்டம் உள்ளது. என் வீட்டிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் வரை செல்ல வேண்டும். குறித்த நேரத்துக்குள் சென்று இறப்பர் பாலை சேகரித்து வந்தால் தான், தொடர்ந்து வேலைகள் செய்து முடிக்கலாம். எனவே நான் அதிகாலை 3 மணியளவில் தேநீர் அருந்தி விட்டு புறப்பட்டு செல்வேன். பின்னர் இறப்பர் மரத்தை தேர்ந்தெடுத்து முந்தையநாள் வெட்டி சிந்திய பாலை சுத்தம் செய்துவிட்டு உளியால் மரப்பட்டையை அகற்ற வேண்டும்.

மரப்பட்டையை உளியால் சீவியவுடன் பால் கசிய ஆரம்பிக்கும். மரத்தில் கட்டி உள்ள கோப்பையில் வழிந்து நிரம்பும். இவ்வாறு ஒவ்வொரு மரமாக சீவி பின்னர் இரண்டு மூன்று மணித்தியாலங்களின் பின்னர் கோப்பையில் சிந்திய பால் அனைத்தையும் மீண்டும் பெரிய வாளியில் ஊற்றி வீட்டிற்கு கொண்டு வருவேன். பின்னர், எனது மனைவி இறப்பர் தட்டுகளை அடுக்கி இரண்டு லிட்டர் தண்ணீருக்கு ஒரு லிட்டர் கோப்பை வீதம் தட்டுகளில் பாலை ஊற்றுவார். இவ்வாறு ஒவ்வொரு தட்டிலும் ஊற்றிய பின்னர் இறப்பர் அசிட்டை யோகட்கப்பில் அரைவாசி என்ற வீதம் ஊற்றி பாலில் கலந்த பின்னர் 4 அல்லது 5 மணி நேரம் அது கெட்டியாக விடவேண்டும்.

**அம்மக்களின் பொருளாதாரத்தில் இறப்பர் மரமும் பாரிய பங்காற்றி வருவதை பற்றி யாரும் அவ்வளவாக பேசவில்லை என்பதே உண்மை. மலையகப் பிரதேசங்களில் பொறுத்தவரையில் குறிப்பாக இறப்பர் மரத்தினையும் இறப்பர் பாலையும் நம்பியும் அன்றாடப் பிழைப்பு உள்ளது.**

அதற்கு அடுத்ததாக இறப்பரை மெல்லியதாக்கும் இயந்திரத்தில் மூன்று முறை போட்டு கணக்கான அளவு மெல்லியதாக்க வேண்டும். அதன் பின்னர் அச்சு பதிக்கும் இயந்திரத்தில் போட்டு அச்சுபதித்த பின்னர் இரண்டு மூன்று நாள்கள் வெயிலில் உலர விட்டு தூசிகள், கழிவுகள் அகற்றிய பின்னர் அது விற்பனைக்கு தயாராகி விடும்.

**கே: இதில் இத்தனை வேலைகளையும் நீங்கள் இருவர் மட்டுமே செய்கிறீர்கள். உங்களுக்கு இதில் பிரச்சினைகள், சிக்கல்கள் எதுவும் இல்லையா?**

பதில்: (சிரிப்புடன் ) ஏன் இல்லை? அதிகாலை எழுந்து அத்தனை கிலோமீட்டர் தூரம் காட்டினை கடந்து தான் செல்ல வேண்டும். செல்லும் வழியில் காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல்கள் அதிகமாக இருக்கும். சில சமயங்களில் காட்டு யானைகள், பாம்புகள் கூட தென்படுவது உண்டு. அவற்றை எல்லாம் கடந்து தான் சென்று பால் வெட்ட வேண்டும். பாதையும் சீராக இருக்காது. வாகனத்தில் பயணிக்கும் போது மிகச் சிரமமாக இருக்கும். என்ன செய்வது இவற்றை எல்லாம் பார்த்தால், குடும்ப வருமானம் என்னாவது? எந்தத் தொழிலில் தான் பிரச்சினை இல்லை?

**கே: இரண்டு பேர் மட்டுமே முழு வேலைகளையும் செய்கிறீர்கள். உங்களால் மட்டும் எப்படி சமாளிக்க முடிகிறது?**

பதில்: ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் போகப்போக பழக்கத்துக்கு வந்துவிட்டது. நான் பாலை சேகரித்து வந்தவுடன் அதற்கடுத்த வேலைகளை இருவரும் இணைந்தே செய்வோம். என் மனைவி வீட்டு வேலைகள் அனைத்தையும் முடித்த பின்னர் எனக்கு உதவுவார். எனவே, இருவரும் இணைந்தே இயந்திரங்களை இயக்குவோம். ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டம் என்றாலும் கூட, என் மனைவி எனக்கு பக்கத்துணையாக இருப்பதால் நீண்ட காலமாக என்னால் இதனை செய்ய முடிகிறது.

**கேள்வி: இறப்பர் பாலினை உற்பத்தி செய்யும் போது என்ன மாதிரியான விடயங்கள் உங்களுக்கு சவாலாக இருக்கும்?**

பதில்: இறப்பர் பால் சேகரித்து வருவது எளிமையாக இருந்தாலும் இறப்பர் பாலை கெட்டியாக அதுதான் மிகவும் சிரமம். பால், நீர், அசிட் என்பவற்றை சரியான அளவில் கலக்க வேண்டும். அத்துடன் இயந்திரங்களை கைகளாலேயே இயக்குவதும், அச்சு பதிக்காவிட்டால் அவை விற்பனைக்கு உகந்ததற்றதாக ஆகிவிடும். அத்தோடு தரம் பிரிக்கும் போதும் தூசுக்கள் இருந்தால் அவை தரம் குறைவு என குறைவான விலைக்கே விற்பனையாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இறப்பர் பால் பதனிடும் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. இறப்பர், பிளாஸ்டிக் சார் கைத்தொழிலுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சந்தை வாய்ப்பு காணப்படுகின்றது. எனவே பதப்படுத்தப்படும் இறப்பர் பால், உள்நாட்டில் உள்ள இறப்பர் தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லப்படுவதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது இலங்கையில் பொருளாதாரத்தில் வருமானத்தை ஈட்டி தருவதில் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது.

இறப்பர் உற்பத்தியினை பொறுத்தவரையில் இறப்பர் தொழிற்சாலைகளில் பணி புரிதல், இறப்பர் பால் சேகரித்தல் போன்றவற்றிற்காக பெருமளவு தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். இறப்பர் உற்பத்தி மேற்கொள்ளப்படும் பிரதேசங்களிலுள்ள பெரும்பாலான ஆண்கள், பெண்கள் இறப்பர் தோட்டங்களில் குறைந்த கூலியில் தொழில் புரிகின்றார்கள்.

2021.03.01ஆம் திகதி வெளியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்துக்கான ஊடக அறிக்கையில், இலங்கையில் இறப்பர் செய்கை மற்றும் அது சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தி குழு ஒன்றை ஸ்தாபிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டது.

பொதுவாகவே, மலையகத்தைப் பொறுத்தவரையில் தேயிலைச் செடிகள் பற்றிய எண்ணக்கரு, தேயிலை தோட்ட தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினைகள் மட்டுமே பேசப்படுகிறது. ஆனால் மலையக பிரதேசங்களில் இறப்பர் உற்பத்தியினை சுய தொழிலாக மேற்கொண்டு வருபவர்கள் பற்றியும் இறப்பர் உற்பத்தியில் உள்ள பிரச்சினைகள் பற்றியும் பேசுவது கிடையாது.





இலங்கை இராணுவத்தின் 72 ஆவது ஆண்டு

# நிறைவு தினம்

கெப்டன் வா சுதர்ஸ்சன்
(தமிழ் ஊடக பொறுப்பதிகாரி
இராணுவ ஊடக பணிப்பகம்)
dharshanrt@gmail.com












காலணித்துவ ஆட்சியில் இருந்துவிடுபட்ட இலங்கைதீவின் அபிமானமிக்க இராணுவம் 1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் சிலோன் இராணுவம் என உருவாக்கப்பட்ட இந்த அமைப்பானது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசாக மாறியதனையடுத்து இலங்கை இராணுவம் என பெயர்மாற்றப்பட்டது. இன்று இலங்கை இராணுவமானது சகல இனத்தவர்களையும் உள்ளடக்கிய உதவிப்படை, காலாட்படை மற்றும் சேவைப்படை எனும் வகுதிகளுக்குள் 24 படையணிகள் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாத்திற்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கையினை வெற்றிகரமாக எதிர்கொண்டு நாட்டின் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதில் மிக முக்கியமான பங்களிப்பை இலங்கை இராணுவம் வழங்கியது. யுத்தத்தின் பின்னர் இராணுவமானது தேசத்தின் பாதுகாப்பிற்கு உறுதுணையாக இருக்கும் அதேவேளை அபிவிருத்திக்கும் தனது முழுமையான பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

2009 ஆம் ஆண்டில் நிறைவுற்ற மனிதாபிமான நடவடிக்கைகளின் பின்னர், இலங்கை இராணுவமானது நாட்டு மக்களின் வாழ்கைதரத்தினை மேம்படுத்தும் முகமாக பல்வேறு விதமான அபிவிருத்தி பணிகள் மற்றும் சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளில் தன்னை அர்பணித்து வருகிறது. அந்த வகையில் விடற்ற வறிய குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுத்தல், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் ஊக்குவிப்பு தொகைகளை வழங்கல், பொதுமக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை அன்பளிப்பு செய்தல், வைத்தியசாலைகள், பாடசாலைகள், வீதிகள் மற்றும் மதஸ்தானங்கள் போன்ற பொது இடங்களை நிர்மாணித்தல் மற்றும் புனர்நிர்மாணம் செய்தல், வீதிகள் விஸ்தரித்தல், செப்பனிடல் , மைதானங்கள் மற்றும் கேட்போர் கூடங்களை புனரமைத்தல் , விளையாட்டு அரங்குகள் மற்றும் மேம்பாலங்கள் அமைத்தல் மற்றும் பலநோக்கு கட்டிடங்களை நிர்மாணித்தல் போன்ற சிலவற்றை குறிப்பிடலாம்.

கோவிட் - 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா யாழ்ப்பாணத்தின் கொவிட் - 19 வைரஸ் பரவல் நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக சென்றிருந்தார். இதன்போது நாட்டின் சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலைசெய்யப்பட்ட முன்னாள் புலிகள் அமைப்பின் 15 முன்னாள் போராளிகளை சந்தித்து கலந்துரையாடிய தளபதி அவர்களுக்கான பிரச்சினைகள் தொடர்பில் தேடி ஆராய்ந்ததுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான சுய தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதற்காக ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் நிதி உதவியை வழங்கியதானது இராணுவத்தின் மனிதாபிமான செயற்பாட்டின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் .

ஒரு நாட்டு இராணுவத்தின் கடமைகள் மற்றும் வகைக்கூறலானது பரந்துபட்டதாக காணப்படுகிறது. அந்த வகையில் இராணுவத்தின் முதன்மை பணியானது நாட்டுமக்கள், உடமைகள் மற்றும் எல்லை ஆகியவற்றினை பாதுகாத்தல் ஆகும். அந்த வகையில் வெள்ளப்பெருக்கு, சூறாவளி, நிலச்சரிவு மற்றும் காட்டுத்தீ போன்ற திடீர் அனர்தங்களின் போது மீட்பு பணிகளில் ஈடுபடுகிறது. இதற்காக நாடு முழுவதும் துறைசார் நிபுணத்துவம் பெற்ற படைக்குழுக்களை விரைவு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தகூடிய வகையில் நிலை நிறுத்தித்தியுள்ளது.

இலங்கை இராணுவத்திடமுள்ள திறமையான ஆளணி வளங்கள் மற்றும் நுட்பங்களை பயன்படுத்தி நாட்டில் கொவிட் வைரஸ் தொற்றின் முதலாவது மற்றும் இரண்டாவது அலையானது பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டது மட்டுமல்லாது தற்பொழுது எதிர்பாராத விதமாக அதிகரித்துள்ள கொரோனா பரவலினையும் கட்டுப்படுத்த தங்களது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றது. இதற்காக நாடு முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட தனிமைப்படுத்தல் நிலையங்கள், இடை நிலை பராமரிப்பு நிலையங்கள் என்பனவற்றை குறுகிய காலத்திற்குள் நிர்மாணித்து மாபெரும் பங்களிப்பை வழங்கி வருகிறது.

கொரோனா தெற்று பரவலினால் பாதிப்புக்குள்ளான நாட்டினை இயல்பு நிலைக்கு விரைவாக கொண்டு வரும் முகமாக, இராணுவமானது கொவிட்-19 தடுப்பூசி திட்டத்தினையும் முன்னெடுத்துவருகிறது. உலக சுகதார அமைப்பின் அறிக்கையின் பிரகாரம் கொவிட்-19 வைரஸ் பரவலுக்கு எதிராக அறிமுகப்படுத்தப்பட்ட தடுப்பூசியின் மூலம் நாட்டில் அவ்வைரஸினால் ஏற்படும் மரண வீதம் வீழ்ச்சியடையும் என தெரிவிக்கப்பகட்டுள்ளது.

நாட்டின் முடக்கத்தின் போது பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்த மக்களுக்கு மரக்கறிவகைகள், உணவுப் பொருட்கள், சமைத்த உணவுகள் மற்றும் மருந்து பொருட்கள் போன்ற அத்தியவசிய தேவைகள் பலவற்றை இராணுவம் நிவர்த்தி செய்தது. தேசத்தின் நலனில் இராணுவம் முன்னிலை வகிக்கின்றது என்பதற்கு இராணுவத்தின் சமீபத்திய கொரொனா கட்டுப்பட்டு தனிமைப்படுத்தல் நுட்பமானது ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த செயற்பாட்டின் மூலம் இராணுவம் தேசத்தின் பாதுகாவலர்கள் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத் திருநாட்டின் முதுகெலும்பாக திகழும் விவசாயத்துறையின் மேம்பாட்டிற்காக, இராணுவத் தளபதியின் எண்ணக்கருவான துருமிதுரு நவரட்டக் எனும் இராணுவத்தின் விவசாய மேம்பாடு மற்றும் நாட்டை பசுமையாக்கும் திட்டத்தின்கீழ், பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் நாடளாவிய ரீதியில் காணப்படும் தூர்ந்த மற்றும் சேதமடைந்த குளங்களை புனர்நிர்மாணம் செய்து அதனூடாக பெருமளவான பயிர்செய்கை நிலங்களை போசணை செய்தது. அது மற்றுமன்றி நாடு முழுவதும் காணப்படும் இராணுவ விவசாய பண்ணைகளில் நெற்செய்கை , தென்னை, மா மற்றும் பிற நீண்டகால பயன் தரும் மரங்களை நடும் செயற்திட்டங்களும் மூலிகை தோட்டங்கள் உருவாக்கலும் நாட்டின் காடுகளின் பரப்பை செரிதாக்கலும் அதிகரித்தலும் போன்ற திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

நாட்டில் பல அர்பணிப்பு சேவைகளை முன்னெடுத்து வரும் இராணுவத்தினர் சர்வதேச ரீதியாகவும் தங்களது விளையாட்டு திறமைகளை வெளிப்படுத்தி நாட்டு மக்களை கௌரவப்படுத்தியுள்ளனர். ஜப்பான் டோக்கியோவில் இடம்பெற்ற 2020- பரா ஒலிம்பிக் போட்டியில் இலங்கை இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஈட்டி எறிதல் போட்டியில் கலந்து கொண்ட ஆணையதிகாரம் பெறா அதிகாரி 1 தினேஷ் பிரியந்த ஹேரத் தங்கப் பதக்கத்தினை சுவீகரித்துக் கொண்டது. அப்போட்டியில் உலக சாதனையினையும் நிகழ்த்தியுள்ளார் என்பது நாட்டிற்கும் இராணுவத்திற்கும் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.

இலங்கை 1957 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் பணிகளில் தனது பணியை ஆரம்பித்தது. பின்னர், 1960 முதல் 1962 வரை கொங்கோ ஜனநாயகக் குடியரசின் அமைதி காக்கும் பணிக்காக ஒரு சிறிய அளவிலான படைப்பிரிவை வழங்கியது. தற்போது ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்காக அதிகமான படையினரை வழங்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

இதுவரை, 1,600 மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் 17,000 மேற்பட்ட இராணுவச் சிப்பாய்கள் உட்பட மொத்தம் 19,300 மேற்பட்ட இலங்கை இராணுவ வீரர்கள் ஐ.நா அமைதிகாக்கும் அமைப்பில் பணியாற்றியுள்ளனர்.




பம்பர கிரிஎல்ல சுற்றுலாத்தளம்

# சுகமான அனுபவம்

முடக்கத்துக்குப் பின்னர் ஒரு சுற்றுலா பயணம்





வி.ரி. சகாதேவராஜா
vtsaha123@gmail.com








கடந்தவாரம் நீக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தையடுத்து, சுற்றுலாத்தளங்களும் படிப்படியாக வழமைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன.

கிழக்கில் பாசிக்குடா, உல்லை, அறுகம்பை போன்ற உல்லாசத்தளங்களை நோக்கி, உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

அதேவேளை, மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை மாவட்டத்தில் பல நீர்வீழ்ச்சிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு களமாக இருந்துவருகின்றன. அதற்கிணங்க, காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கி.ஜெயசிறில், கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோருடன் நானும் மாத்தளைக்கு அண்மையில் விஜயம்செய்தோம்.

மாத்தளை மாநகரின்கண் அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற மாத்தளை முத்துமாரியம்மன் கோவிலுக்குச் சென்று, நெய்விளக்கேற்றி வழிபட்ட பின்னர், நிவர்ஸ்டன் எனும் அழகிய சுற்றுலா மையத்தை நோக்கி புறப்பட்டோம்.

அது நகரிலிருந்து, 24 மைல்கல் தொலைவில் உச்சியில் அமைந்துள்ளது. செல்லும் வழியில், அதாவது 16 மைல்கல் தொலைவில் இந்த அழகிய நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. இது மாத்தளை, ரத்தோட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது.

மாத்தளையில் பிரசித்திபெற்ற பம்பர கிரிஎல்ல நீர்வீழ்ச்சியை நோக்கி சுற்றுலாப் பயணிகள் வர ஆரம்பித்துள்ளதை அங்கு காணமுடிந்தது. கொரோனாவால் அடைபட்டுக்கிடந்த மக்கள், வீட்டைவிட்டு மெல்லமெல்ல வெளியே வந்து, சுற்றுலாத் தளங்களை நோக்கி மக்கள் செல்ல ஆரம்பிப்பதை, நீர்வீழ்ச்சியில் மக்கள் நின்றிருக்கும் காட்சி கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தது.

பம்பர கிரிஎல்ல நீர்வீழ்ச்சியில் உள்ள விசேடம் என்னவென்றால், மூவின மக்களும் ஒரேவேளையில் ஒன்றுகூடிப் பழகுவதும் நீராடுவதும் ஆகும். அங்கு ஜாதி மத பேதமில்லாமல் மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் காணலாம்.

கடந்த சில மாதங்களாக, பம்பர கிரிஎல்ல நீர்வீழ்ச்சிக்குச் செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வாரம் மீண்டும் அது திறக்கப்பட்டதாக, மாத்தளை மேயர் சந்தனம் பிரகாஷ் அறிவித்திருந்தமையே மக்கள் அங்குவரக்காரணமாகும்.

இயற்கையின் மனோரம்மியம் நிறைந்த பச்சைப்பசேலான காட்டுக்கு மத்தியில், அந்த நீர்வீழ்ச்சிக்கு அருகே தொங்குபாலமொன்று அமைந்திருப்பதும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அம்சமாகும்.

சுற்றுலாப் பயணிகள் பலர் நீர்வீழ்ச்சியில் நீராடிக் கொண்டிருக்கும்போது, இன்னும் பலர், தொங்குபாலத்தில் நடந்து குதூகலித்தனர். இடைநடுவில் வரும்போது பாலம் தள்ளாடித் தளம்பும். தொங்கு பாலத்தில் நடந்து வருபவர் பயமடைவார். இருப்பினும் பாதுகாப்பாக, இருமருங்கிலும் கம்பிகள் கட்டப்பட்டுள்ளன. அதைப் பிடித்துக்கொண்டு நடக்கலாம். பாலத்தில் நடப்பதற்காகப் போடப்பட்டிருக்கும் பலகைகள், சிலஇடங்களில் பழுதடைந்து இருப்பதும் பயணிகள் அச்சமடையக் காரணமாக இருந்திருக்க வேண்டும். இவற்றை ரத்தோட்ட பிரதேச சபை பழுதுபார்த்து, பயணிகளைப் பாதுகாக்க வேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகும்.

நாங்கள், அப்பகுதியில் சிறிதுநேரம் நின்று அவதானித்துவிட்டு, நிவர்ஸ்டன் நோக்கிப் பயணித்தோம். வளைந்துநெளிந்து செல்லும் பாதையூடாக ஏறஏற, குளிர் அதிகரித்தது. ஒரு கட்டத்தில், இயற்கையை இரசிப்பதற்காக ஓரிடத்தில் வாகனத்தை நிறுத்தி விட்டு, இறங்கிப் பார்வையிட்டோம். இலங்கை, ரூபவாஹினி ஒளிபரப்புக்கோபுரம் அமைந்துள்ள மலையையும் கோபுரத்தையும் பார்வையிட்டோம்.

பின்னர், நேராக நிவர்ஸ்டன் பகுதியை அடைந்தோம். இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட, நிவர்ஸ்டன் தனித்துவமானதாகும். இங்கு மணித்தியாலத்துக்கு மணித்தியாலயம் வானிலை மாறிக்கொண்டிருக்கும். திடீரென பலத்த காற்றுவீசும்; மறுகணம், மழைபொழியும்; பின்னர், வெயில் எறிக்கும். மறுகணம், ஜில் என்று குளிர்த் தென்றல் வீசும்; மறுகணம், பனிபெய்யும்; மேகம் அடிக்கடி அரவணைக்கும். இவ்வாறானதொரு மனோரம்மியமான சூழல் நிவர்ஸ்டனில் நிலவுவது விஷேசம்தான்!

மொத்தத்தில், மாத்தளை மாநகரின் மாட்சிக்கு அணிசேர்க்கும் இவ் இயற்கை உல்லாசப் பயணத்தளங்கள், மக்களைப் பெரிதும் கவர்ந்துவருகின்றன. மாநகர மேயர் பிரகாஷின் அன்பான விருந்தோம்பலை இவ்வண் மறக்கமுடியாது; மூன்றுநாள் பயணத்துக்குப் பின்னர் ஊர் திரும்பினோம்.

அப்பகுதியிலுள்ள இயற்கை வளப்புமிக்க இன்னும் பல இடங்களையும் மக்கள் கண்டுகழித்து வருகின்றனர். கொரோனா அச்சம் நீங்க, மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ்க்கையை இரசிக்கத் தொடங்கியுள்ளமை மனதுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 09 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.